விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 249 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 08 வெள்ளிக்கிழமை (25.08.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

ராஜா, பாரதி பாஸ்கர்
பங்குபற்றும்
சிறப்புப்
பட்டிமன்றம்
இன்று
யாழ்.கலாசார மத்திய நிலையத்தில்

# மன்னாரில் இருவர்

# சுட்டுக் கொலை

## பழிக்கு பழி வாங்கும் சம்பவம் எனத் தெரிவிப்பு

(மன்னார்)

மன்னார் அடம்பன் முள்ளிக் கண்டல் பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் மீது இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்தனர்.

(15ஆம் பக்கம் பார்க்க)





## நல்லைக்குமரன் இன்று வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு யாழ்.மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழு வருடந் தோறும் வெளியிடுகின்ற நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறும்.

நல்லை ஆதீன ▷15

பண்ணாகத்தில்

## விபரீத முடிவெடுத்த இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காலையடி தெற்கு பண்ணாகம் பகுதியைச் சேர்ந்த

▷15

## போட்டி போட்டு வழிபாட்டுத் தலங்களை அமைப்பதை உடன் நிறுத்துக



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

(திருகோணமலை)

போட்டி போட்டு மதவழிபாட்டுத் தலங்களை அமைப்பதை உடன் நிறுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

திருகோணமலை விமானப்படை தளத்தில் நேற்று நடைபெற்ற திரு

▷15

## மோ.சைக்கிள் விபத்து; 14 வயது சிறுவன் பலி

கொற்றாவத்தையில் சம்பவம்

(கரணவாய்)

மோட்டார் சைக்கிளும் டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதுண்ட விபத்தில் 14 வயதுடைய சிறுவன் உயிரிழந்ததோடு இளைஞன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் ▷15

சரத் வீரசேகரவின் உரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து

## முல்லையில் சட்டத்தரணிகள் இன்று போராட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தொடர்பாக அவதூறு பரப்பும் வகையிலும், நீதித்துறைச் சுதந்திரத்தை கேள்விக்குட்படுத்தும் வகையிலும் சரத் வீரசேகர பாராளுமன்றில் ஆற்றிய உரையை கண்டித்தும் எதிர்ப்புத் தெரிவித்தும் இன்று முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கத்தினரால் அடையாள

▷15

## தொல்பொருளை சேதப்படுத்தினால் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

புத்த சாசன அமைச்சர் விதுர

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட நாட்டின் அனைத்து பகுதிகளிலும் இடம்பெறும் தொல்பொருள் அழிப்பு தொடர்பான தகவல்கள் கிடைக்கப்பெற்று வருவதாக, விடயத்துடன் தொடர்புடைய அமைச்சர், விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

தொல்பொருள் ▷15



## மின்சார கம்பியில் தேர் மோதுண்டதில் இருவர் உயிரிழப்பு

(பதுளை)

பதுளை - நமுனுகுல - பூட்டாவத்த பகுதியில் இரதம் ஒன்று அதிவேக மின்சாரத்தை கடத்தும் வடத்தில் மோதுண்டதில் இரண்டு ஆண்கள் உயிரிழந்தனர்.

சம்பவத்தில் 3 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

▷15

வட மாகாணத்தில்

## வெப்பநிலை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாணம் உட்பட நாட்டின் சில இடங்களில் இன்று வெப்பநிலை அதிகமாக காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

▷16

## தோட்ட வேலை செய்தவர் வீதியில் விழுந்து மரணம்

குப்பிளானில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

தோட்டத்தில் வேலை செய்துவிட்டு வீட்டுக்கு வந்தவர் வீதியில் விழுந்து மரணமடைந்த சம்பவம் ஒன்று நேற்றையதினம் பதிவாகியுள்ளது.

ஏழாலை தெற்கு பகுதியைச் சேர்ந்த இராசேந்திரம் நாகேஷ்வரன் (வயது-37) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும்

▷15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணீர் அஞ்சலி

ஊடகவியலாளர் **ஐ.சிவசாந்தன்** அவர்களின்
அன்புத் தந்தையார்

**அமரர் சிங்கவேலு ஐங்கரன்**

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின்ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**- வலம்புரி நிர்வாகம்**

# யாழ் நகரில் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அண்மையில் 3 1/2 பரப்பு காணி இரண்டு வெட்டு கிணறுகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு.55 (SL Rs.) மில்லியனுக்கு மேலான விலை எதிர்பார்க்கப்படுகிறது.

(16830)

**மின்னஞ்சல் : jamesraj_uk@yahoo.co.uk**
**+44 796 374 3585** (Whatsapp)
**021 222 7141** (Sri Lankan no)

## கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் (வ.து)

# பதவி வெற்றிடம்

**பதவிகளும் அதற்கான அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளும் (02/2022இன்படி)**

**1) 101 / 07 பொது முகாமையாளர் - வெற்றிடம் 01**
**சம்பள அளவுத் திட்டம் - 21125-275*10-300*10-26875**

அ. கூட்டுறவு ஊழியர் 08ஆவது சம்பளத் திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் /

கூட்டுறவு ஊழியர் 09 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் முகாமைநிலை / மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம் / அதற்குச் சமமான தகைமை இத் தகைமையானது கணக்கியல் / வியாபார புள்ளி விபரவியல் / வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும் / இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியல் / முகாமைத்துவம் / வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி.

அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்த 05 ஆண்டு கால அனுபவம்/

க.பொ.த உயர்தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்

**2. 208/15 களஞ்சிய முகாமையாளர் / கிளை முகாமையாளர் - வெற்றிடம் 01**
**சம்பள அளவுத் திட்டம் - 17435-145*10-160*10-20485**

அ. கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 17ஆவது சம்பளத் திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவு பணியாளர் (சாதாரண தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த சாதாரண தரப் பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ் மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி.

**2. 208/16 களஞ்சிய முகாமையாளர் / கிளை முகாமையாளர் - வெற்றிடம் 03**
**சம்பள அளவுத்திட்டம் - 16975-135*10-150*10-19825**

அ) கூட்டுறவு ஊழியர் 17ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி அல்லது க.பொ.த சாதாரண தரப் பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ் மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி.

கட்டைவேலி நெல்லியடி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் ஆளணி அங்கீகாரப்படி மேற்படி பதவிக்கு வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

1. வயது 18 - 45
2. சங்க பணியாளர்களுக்கு வயது எல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.
3. சங்கப் பணியாளர்கள் தங்கள் சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.
   சங்க எல்லைப் பரப்புக்குள் வசிப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
4. கூட்டுறவுச் சங்கத்தில் வேலை அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
5. தகுதியானவர்கள் தங்கள் விண்ணப்பப் படிவங்களை காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தி 06.09.2023ந் திகதிக்கு முன்னர் தலைவர், கட்டைவேலி நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நெல்லியடி, கரவெட்டி என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

**தலைவர்**
**கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்**
**நெல்லியடி, கரவெட்டி.** [illegible]

(C-7127)

# கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலக சமுர்த்தி மகா சங்கத்தில்
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக
கடமையாற்றும் **திரு. தெ.சசீந்திரன்**
அவர்களுடைய அன்புத் தாயார்

**அமரர் தெய்வேந்திர ஐயர் மாணிக்கம்**

அவர்கள் 23.08.2023 அன்று
காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால்
துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்...
**பிரதேச செயலாளரும் அனைத்து உத்தியோகத்தர்களும்,**
**ஊழியர் நலன்புரிச் சங்கம்,**
**பிரதேச செயலகம், பருத்தித்துறை.**

தோற்றம் **07.05.1950** மறைவு **23.08.2023**

(C-7128)

# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில் கடமையாற்றும்
**ஐ.சிவசாந்தன்** அவர்களின்
அன்புத் தந்தையார்

**அமரர் சிங்கவேலு ஐங்கரன்**

அவர்களின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.
**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

(C-7132)

**டொட் லைன்கலர்லாப்**
**உரிமையாளரும், ஊழியர்களும்**

## யாழ்ப்பாணம் மாநகர சபை

**நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவகால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான**

# மீள் கேள்விஅறிவித்தல் - 2023

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகள் அமைப்பதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளுக்கான விண்ணப்பப் படிவங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.

- கேள்விப்படிவக்கட்டணம் : **ரூபா 1,000.00 + Vat 15%**
- கேள்விப்படிவம் விநியோகிக்கும் திகதி :- **25.08.2023** தொடக்கம் **31.08.2023** வரை
  (ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த நாட்களில் மு.ப **9.00** - பி.ப **2.30** மணி வரை)
- கேள்விப்படிவம் விநியோகிக்கும் இறுதித்திகதி :- **31.08.2023** பி.ப **12.30** மணி வரை
- கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் :- **01.09.2023** முற்பகல் **10.00** மணிவரை
- கேள்விப்படிவம் திறத்தல் :- **01.09.2023** முற்பகல் **10.00** மணிக்கு
- தற்காலிக கடைகளுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் ரூபா **2,000.00**

விண்ணப்பப் படிவங்கள் யாவும் ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு நானாவித இறைவரிப் பகுதியில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியினுள் 01.09.2023 முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளித்தல் வேண்டும். கேள்வியில் சித்தி பெற்றவர்கள் தங்களுக்குக் கிடைத்த சகல கடைகளுக்குமான கேள்வித் தொகையினை முழுமையாகச் செலுத்தி குறிக்கப்பட்ட இடத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை மாநகரசபை நானாவித இறை வரிப்பகுதியில் பெற்றுக்கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.

கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

(C-7126)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரன் பண்டாரவன்னியனின் 220 ஆவது வெற்றிவிழா சிறப்பு மலர்

## வீறுநடை போட்டு வலம் வர மனதார வாழ்த்துகின்றேன்

வீரம் செறிந்த வன்னி மண் என சிறப்பிக்கப்படுவதும் பண்டைத் தமிழர் நம் சிந்தனை மரபுகளைத் தொன்றுதொட்டு அழியாது காத்து வருவதுமான முல்லைத்தீவு மாவட்டத்தில் வன்னி மண்ணிலே ஆட்சிபீடமேறிய இறுதி மன்னனும் வீர மன்னனுமாகிய "பண்டாரவன்னியனின்" வீர வரலாற்றினைப் பறைசாற்றி நடாத்தப்படும் "220 ஆவது ஆண்டு வெற்றி நினைவு நாள்" சிறப்பான முறையிலே அமைய வேண்டி எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைவதோடு காலத்தினது தேவையறிந்து முன்னெடுக்கப்படும் இப்பெரு முயற்சியினை பெருமிதத்தோடு வரவேற்று பேருவகையடைகின்றேன்.

தொடர்ச்சியான நீண்ட பண்பாட்டு பாரம்பரியத்தை உடைய இம்மாவட்டத்தின் தொன்மையினையும் பண்பாட்டினையும் வாழ்வியல் அம்சங்கள் மற்றும் பிரதேச அடையாளங்கள் என்பன வழக்கொழிந்து போகாமல் அவற்றினை ஆவணப்படுத்தும் வகையில் இந்நிகழ்வானது இடம்பெறுவதனையெண்ணிப் பெருமையடைவதோடு இவ்வாறான வெற்றி விழாக்கள் எமது கலாசார. பண்பாடுகளைப் பறைசாற்றி நிற்கும் வல்லமை படைத்தவையாக மாற்றம் பெற வேண்டும்.

வரலாறு பேசும் ஓர் மாமன்னனின் வெற்றிக் களிப்பினைக் கொண்டாடும் இவ்விழாவானது இடைவிடாது தொடர்ச்சியாக இடம்பெற வேண்டுமெனவும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் அன்போடு பகிர்ந்து நிற்கின்றேன்.

"காலத்தை மீட்கும் சக்தியும் காலத்தை மாற்றும் சக்தியும் எழுதுகோலில் மைத்துளிக்கு உண்டு"

**அ.உமாமகேஸ்வரன்,**
**மாவட்ட செயலாளர், முல்லைத்தீவு.**

## வெள்ளையரை எதிர்த்து நின்ற மாவீரன் பண்டாரவன்னியன்

முல்லைத்தீவு மாவட்ட ஒட்டுசுட்டான் பிரதேச கற்சிலைமடு கிராமத்திலுள்ள மாவீரன் பண்டாரவன்னியன் நினைவாலயத்தில் 220 ஆவது ஆண்டு வெற்றி விழாவினை பண்டாரவன்னியன் விழாக் குழுவினர் சிறந்த முறையில் கொண்டாடுவதையிட்டு.நான் மிகவும் மனநிறைவடைகிறேன்.

ஆண்டுதோறும் மாவீரன் பண்டாரவன்னியனின் பெருமையினை பறைசாற்றுகின்ற நிகழ்வுகளை மேற்படி செயற்பாட்டுக் குழுவினர் திறம்பட நடாத்தி வருகின்றனர். இவ்வாண்டும் எங்களின் வரலாற்று அடையாளமாக அமையும் இவ்விழா சிறப்புற அமைய எனது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பிரதேச செயலாளர்,**
**திருமதி. ஜெயராணி பரமோதயன்,**
**ஒட்டுசுட்டான்.**

## வாழ்த்துச்செய்தி

வீரத்துக்கும் மானத்துக்கும் இலக்கணமான மாமன்னனும் வீரனுமான பண்டாரவன்னியனை போர்த்துக்கேயரால் இலகுவில் வெற்றி கொள்ள முடியவில்லை. குறிஞ்சி. முல்லை. நெய்தல். பாலை ஆகிய நான்கு நிலப்பரப்புக்களையும் தன்னகத்தே கொண்ட இயற்கையின் பூரிப்பு இந்த வன்னிப் பிரதேசம். இப்பிரதேசத்தில் பீரங்கிகளை வாளால் வெற்றி கொண்ட மாவீரனின் 220 ஆவது ஆண்டு வெற்றி நினைவுநாள் நிகழ்விற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் நான் பெருமை அடைவதோடு இந்நிகழ்வின் ஏற்பாட்டுக் குழுவிற்கும் எனது பாராட்டை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி.மாலதி முகுந்தன்,**
**துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர்.**

## அருளாசிகள் நிறைந்திருக்க திருவருளை வேண்டுகிறேன்

வன்னி மாநிலத்தின் தொன்மைச் சிறப்புமிகு கற்சிலைமடுவில் மாவீரன் பண்டாரவன்னியனின் நினைவு கல்வெட்டு தமிழர் வீர வரலாற்றை பறைசாற்றி நிற்கிறது. குலம் காத்த குலசேகரம் வைரமுத்து பண்டாரவன்னியனார் முல்லைத்தீவுக் கோட்டையை வெற்றி கொண்ட 220 ஆவது நிறைவு வெற்றி விழா நினைவு நாள் இன்று எமது ஒட்டுசுட்டான் வேகாவனப் பெருமானின் திருவருளாலே கற்சிலை மடுவிலே சிறப்பாக முன்னெடுக்கப்படுகிறது. இந்நிகழ்வு இனிதே நிறைவடைய பூலோக நாயகி அம்பிகை சமேத வேகாவனப் பெருமானின் அருளாசிகள் கிடைக்க அவர் பாதம் தொழுது ஆசிகளை வழங்கி மகிழ்கிறேன்.

**கிரியாதிலகம் சிவஸ்ரீ ச.கீர்த்திவாசக்குருக்கள்,**
**பிரதமகுரு,**
**ஒட்டுசுட்டான் தான்தோன்றியீச்சரம்,**



## வெள்ளிவிழாச் செய்தி வானைப் பிளக்கட்டும்

1803 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 25 ஆம் நாள் மாவீரன் பண்டாரவன்னியன் முல்லைத்தீவுக் கோட்டையை கைப்பற்றியதாகவும் 1803 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 31 ஆம் நாள் தற்போது கற்பொறி அமைந்திருக்கும் பகுதியில் கப்டன் வொன்றிபேக் என்ற ஆங்கிலத் தளபதியால் பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்டான் என்றும் வரலாற்றுகள் எமக்கு தெரிவிக்கின்றன. இச்சம்பவங்கள் இடம்பெற்று 220 ஆண்டுகள் கடந்திருக்கின்றன. இக்காலம் ஒரு நீண்ட கால இடைவெளி அல்ல. மிகக் குறுகிய காலமாகவே உள்ளது.

இக்காலப்பகுதிக்கான வரலாற்று தடயங்களைத் தேடி ஆய்வு செய்து வெளிக்கொணர வேண்டியது வரலாற்றுத் துறை சார்ந்த வல்லுநர்களின் தலையாய கடமையாகும். மாவீரன் பண்டாரவன்னியன் 220 ஆவது விழா சிறக்க வாழ்த்துவதுடன் இனிவரும் காலங்களில் இவ்விழா இன்னும் மேலாக இடம்பெற வேண்டும் என்ற எண்ணத்தையும் முன்வைக்கின்றேன்.

**திரு.தெய்வேந்திரம், இந்திரதாஸ்(தாஸ்) ஸ்தாபகர்,**
**V.Pபவுண்டேசன் தலைமைச் செயலகம் விசுவமடு முல்லைத்தீவு.**

## 220 ஆவது வெற்றி விழா சிறக்கட்டும் மாவீரன் புகழ் ஓங்கட்டும்

இற்றைக்கு 220 வருடங்களுக்கு முன்னர் வன்னியை இறுதியாக ஆட்சி புரிந்த மன்னனாகத் திகழ்ந்த மாவீரன் மாமன்னன் பண்டாரவன்னியன் தலைமையிலான படையணி முல்லைத்தீவில் அமைந்திருந்த ஆங்கிலேயக் கோட்டையைத் தாக்கி தகர்த்தழித்து இரண்டு பீரங்கிகளை கைப்பற்றியதோடு மட்டுமல்லாது அக்கோட்டையில் நிலைகொண்டிருந்த ஆங்கிலேயப் படைகளின் தளபதியான கப்டன் வொன்றிபேக் என்பவரையும் ஏனைய ஆங்கிலேயப் படைகளினரையும் நிலைகுலையச் செய்து அவர்கள் கடல் மார்க்கமாக தப்பி ஓடியதாக வரலாறுகள் எமக்கு எடுத்தியம்புகின்றன. இவ்வாறு இறுதி மூச்சுவரை உறுதியோடு போராடிய வன்னி இராச்சியத்தின் கடைசி மன்னரின் வெற்றி நினைவு விழாவை நாம் சிறப்பாக முன்னெடுப்பதன் மூலம் எமது இளைய சந்ததிக்கு இவ்விடயம் தெரியப்படுத்தப்படுவது மட்டுமல்லாது இன்னும் உன்னதமான முறையிலே இவ் வெற்றி நினைவு விழா இனிவரும் காலத்தில் கொண்டாடப்பட வேண்டும் என்ற செய்தியும் இங்கு முன்வைக்கப்படுகின்றது.

**கலாபூஷணம் சின்னத்துரை வேதவனம் செயலாளர்,**
**பண்டாரவன்னியன் விழாக்குழு, கற்சிலைமடு.**

## விழா சிறக்க வாழ்த்துகிறோம்

கற்சிலைமடு பண்டாரவன்னியன் சிலை வளாகத்தில் இன்று முன்னெடுக்கப்படும் மாவீரன் பண்டாரவன்னியன் அவர்களின் 220 ஆவது வெற்றி நினைவு விழா எமது கிராமத்திற்கு புதுப்பொலிவையும் பெருமையையும் சேர்த்து நிற்கிறது. எங்கள் பண்பாடு காத்து பாரம்பரியத்தைப் பேணி அடுத்த தலைமுறையினரிடம் கையளிக்கும் இது போன்ற நிகழ்வுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும். இந்நிகழ்வு சிறக்க உழைக்கும் அனைவருக்கும் எமது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்வடைகிறோம்.

**திருமதி.ஸ்ரீரஜா ரஞ்சித்பிரதீபன்,**
**கிராம உத்தியோகத்தர் கற்சிலைமடு,**
**திருமதி.துஸ்யந்தினி துசிதரன்,**
**அபிவிருத்தி உத்தியோகத்தர் கற்சிலைமடு,**
**திருமதி.தர்சினி இதயகோபன்,**
**[illegible] கற்சிலைமடு.**

## பண்டாரவன்னியன் வெற்றிநாள்

வன்னி நெருப்பு என்றும் பொருள்பட்டது. பெருந்தலை நிகர்த்த வீரத்தமிழர் வழிவந்த மாமன்னன் பண்டாரவன்னியனின் எழுச்சி தமிழ் வீரத்தை உலகறியச் செய்தது. கடைசி வரை முயன்ற அந்நியர்கள் ஆயிரத்து எழுநூறுகளின் பிற்பகுதியிலேயே ஆங்கிலேயரின் வரவுடன் வன்னியை நெருங்கினர்.

கனரக படைக்கலங்களுடன் நகர்ந்த பிரித்தானியருக்கு சிம்மசொப்பனமானது பண்டாரவன்னியனின் படை வாளும் வேலும் ஆங்கிலப் படையை கதிகலங்க வைத்தது. கடைசி வரை போராடிய ஆங்கிலேயர் வன்னியில் கால்பதித்து முல்லைத்தீவில் கோட்டை அமைத்தனர். ஆனால் அதனை அவர்களால் பாதுகாக்க முடியவில்லை. உலக வரலாற்றில் தமிழ்வீரம் நிலைநிறுத்தப்பட்ட நாளே பண்டார வன்னியன் வெற்றி விழா. ஆண்டுதோறும் மானவீரனின் வெற்றிநாள் கற்சிலைமடு பண்டாரவன்னியன் சிலை வளாகத்தில் வேரின் அடி தொட்டு விழுது விடுகிறது.

**சி.நாகேந்திரராசு. (அதிபர்)**

## வன்னியின் இறுதி மன்னன் மாவீரன் பண்டாரவன்னியன்

வன்னியின் இறுதி மன்னன் மாவீரன் பண்டாரவன்னியனின் 220 ஆவது வெற்றி நினைவு விழாவை நாம் இன்று கொண்டாடுகின்றோம்.இவ்வெற்றி நினைவு விழா ஒவ்வொரு வருடமும் நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம். அதே போல் இவ்வருடமும் இவ்விழாவை எமது விழாக்குழு முன்னெடுத்து செயற்படுத்தும் போது நாம் நிதித் தேவைக்குத் தேடிச் சென்ற போது முகம் சுழிக்காது தங்களால் இயன்றவரை நிதிப் பங்களிப்பை வழங்கிய நல்லுள்ளங்கட்கு நாம் தலை சாய்கின்றோம். உண்மையில் இவ்விழாவை சிறப்பாக முன்னெடுக்க வேண்டியது காலத்தின் தேவையாகவே உள்ளது. இனிவரும் காலங்களில் இவ்விழா தொடர்பாக வேலைத்திட்டங்கள் இன்னும் சிறப்பாக முன்னெடுக்க அனைவரும் முன்வர வேண்டும். பூரணமான ஆதரவையும் தரவேண்டும்.எமது அடுத்த சந்ததியினர் கைகளிலே இவ்விழாவை நாம் கையளிக்க வேண்டுமானால் நாம் இவ்விழாவை நல்ல முறையில் நடாத்திக் காட்ட வேண்டும்.

**திரு.பாலகிருஷ்ணன் -சுதாகர்(சுதா, (பொருளாளர்),**
**பண்டாரவன்னியன் விழாக்குழு, கற்சிலைமடு.**

## பண்டாரவன்னியன் புகழ் ஓங்கட்டும்

வன்னி மண்ணின் இறுதி மன்னன் மாவீரன் பண்டாரவன்னியன் முல்லைத்தீவுக் கோட்டையைக் கைப்பற்றி 220 ஆண்டுகள் நிறைவு பெறுகிறது. டச்சுக்காரரான லெப்ரினன் ராகெல் அவர்களால் கட்டப்பட்ட கோட்டையானது ஆங்கிலேயருக்கு ஆட்சியுரிமை மாறிய போது ஆங்கிலேயரால் பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்தக் கோட்டையை பண்டாரவன்னியன் தலைமையிலான படையினர் 1803 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி தாக்கி கட்டளை தலைமையதிகாரி கப்வொன் றிபேக் தலைமையிலான ஆங்கிலேயப் படைகளை விரட்டியடித்தார்கள். ஆங்கிலேயப் படையினர் படகு மூலம் யாழ்ப்பாணத்துக்கு தப்பியோடினர். இரண்டு பீரங்கிகளையும் பண்டாரவன்னியன் கைப்பற்றினான். ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போர் புரிந்த மாவீரன் பண்டாரவன்னியனின் 220 ஆவது வெற்றிவிழா சிறக்கவும் பண்டாரவன்னியனின் புகழ் ஓங்கி வளர்கவும் வாழ்த்துகின்றேன்.

**சித்த மருத்துவர் நாகமணி வன்னியசிங்கம்,**
**தலைவர், பண்டாரவன்னியன் விழா ஏற்பாட்டுக்குழு,**
**கற்சிலைமடு.**

## விழா சிறக்க வாழ்த்துகிறோம்.

ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு அடிபணியாது அடிமையாய் வாழான் தமிழன் என்று வரலாற்றில் வன்னியர் பெருமையை உலகறியச் செய்த மாவீரன் பண்டாரவன்னியனின் 220 ஆவது வெற்றி விழா சிறக்க வாழ்த்துகிறோம்.

**திரு.து.ஸ்ரீதர்,**
**உரிமையாளர், திவ்வியம் பந்தல் சேவை, ஒட்டுசுட்டான்.**

## வாழ்த்துரை

"தார்தாங்கி செல்வது தானே தலைவந்த
போர் தாங்கும் தன்மை அறிந்து"

களத்தில். முதலில் எதிர்கொள்ளும் போரை தாங்கி தகர்க்கும் ஆற்றலை அறிந்திருப்பின் அதுவே வெற்றி மாலை தாங்கி செல்லக் கூடிய சிறந்த படையாகும் எனும் அய்யன் வள்ளுவனின் வாக்குக்கொப்ப

வன்னி மண்ணின் இறுதி மன்னன் - மாமன்னன் மாவீரன் பண்டாரவன்னியனின் 220 ஆவது ஆண்டு வெற்றி நினைவு நாள் சிறப்பு மலரில் வாழ்த்துரை வழங்குவதில் மகிழ் கொள்கிறேன்.

"நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்"

(திருமுறை) எனும் கூற்றுக்கு உருக்கொடுக்க உலகறிய பாராண்ட வெள்ளையின வெல்லாதிக்க அரசுக்கு சிம்ம சொற்பனமாய் சிரம் தாழ்த்தா செருக்குடையோனாய் தலை நிமிர்ந்து. திசை அறிந்து. விரல் அசைத்து. படை நகர்த்தி. பாசறை புகுந்து. பகை சிதைத்து வெற்றி வாகை சூடிய எம் பெரும்பாட்டன் பண்டாரவன்னியனின் வீரத் திருநாளை விமர்சையாய் கொண்டாடும் பண்டாரவன்னியன் அறங்காவல் கழகத்தினருக்கும் விழா ஏற்பாட்டுக் குழுவினருக்கும் நன்றியோடு கூடிய வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்வு கொள்கிறேன்.

**இயக்குநர் அருட்பணி சூ. யே. ஜீவரட்ணம் அமதி,**
**"மலரும் முல்லை" சமூக மேம்பாடு மற்றும் கல்வி வளாகம், ஒட்டுசுட்டான்.**

(சி-7130)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2024 ஐ.பி.எல் தொடர் ஐக்கிய அரபு அமீரகத்தில்?



கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் ஐ.பி.எல் கிரிக்கெட் தொடர் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு வருகிறது.

ஆரம்பத்தில் 8 அணிகள் மட்டுமே விளையாடிய நிலையில் ஒவ்வொரு ஆண்டும் பல மாறுதல்கள் நடந்து தற்போது 10 அணிகள் ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடி வருகின்றன.

இதுவரை ஐ.பி.எல் கிண்ணத்தை மும்பை இந்தியன்ஸ், சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 5 முறை கைப்பற்றி உள்ளது.

இவர்களுக்கு அடுத்தபடியாக ஐதராபாத், கொல்கத்தா 2 முறையும் ராஜஸ்தான், குஜராத் 1 முறையும் கைப்பற்றியுள்ளது.

இந்நிலையில் அடுத்தாண்டு ஐ.பி.எல் தொடர் இந்தியாவில் நடக்காது என்ற புதிய தகவல் வெளியாகி உள்ளமை ரசிகர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

ஐ.பி.எல் தொடர் வருடம் வருடம் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நடைபெறுவது வழக்கமாக உள்ளது.

அடுத்த ஆண்டு இந்த மாதங்களில் பாராளுமன்ற தேர்தல் வருவதால் ஐ.பி.எல் தொடர் வேறு இடங்களுக்கு மாற்றப்படுவதாகவும் இலங்கை மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறும் எனவும் தகவல் வெளியாகி உள்ளது. (4)

# சிம்பாவே முன்னாள் வீரர் ஸ்ட்ரீக் தொடர்பான வதந்திக்கு முற்றுப்புள்ளி



புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிம்பாவே கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஹீத் ஸ்ட்ரீக் உயிரிழந்துள்ளதாக போலியான செய்திகள் வலம் வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹென்றி ஒலோங்கா என்ற நபர் அவருடன் நடத்திய வாட்ஸ்அப் உரையாடலை பகிர்ந்து இதனை தெரிவித்துள்ளார்.

ஹீத் ஸ்ட்ரீக் 1990 முதல் 2000 ஆம் ஆண்டு வரை பிளவர் சகோதரர்கள் விளையாடிய காலத்தில் முக்கிய வேகப்பந்து வீச்சாளராக திகழ்ந்தார்.

சிம்பாவே அணிக்காக 65 டெஸ்ட், 189 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 4933 ஓட்டங்களை பெற்றுக் கொண்ட ஹீத் ஸ்ட்ரீக், 455 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார்.

2005 ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற ஹீத் ஸ்ட்ரீக், பல்வேறு அணிகளுக்கு பயிற்சியாளராக இருந்துள்ளார்.

பங்களாதேஷ், சிம்பாவே சர்வதேச அணிகளுக்கும் ஐ.பி.எல் கிரிக்கெட்டில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கும் பயிற்சியாளராக இருந்துள்ளார். (4)

# வாலிபர் கிண்ண உதைபந்தாட்ட தொடர்



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு யாழ்.மாவட்டரீதியில் தெரிவு செய்யப்பட்ட 32 அணிகள் மோதும் “வாலிபர் கிண்ணம்” மாபெரும் உதைபந்தாட்ட தொடர் நாளை சனிக்கிழமை முதல் இளவாலை புனித ஹென்ரியரசர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

முதல் நாள் ஆட்டத்தில் மாலை 3.30 மணிக்கு கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி எதிர், கீரிமலை சிவானந்தா அணியும் மாலை 4.30 மணிக்கு நாவாந்துறை சென்மேரிஸ் அணி எதிர்அராலி பாரதி அணிகளும் மோத உள்ளன. (4-6)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2896

### தனோராஜ்

படிச்ச Question
எழுதும் போது கூட கை வலிக்கல



ஆனா படிக்காத Question க்கு கதை
எழுதும் போது தான்டா கை வலிக்கும்.

### வட்சலா

அம்மா-ஊத்திட்டேன் வேஸ்டாயிரும்
இந்த ஒரு தோசை மட்டும் சாப்பிட்டிருப்பா



மனைவி- தோசை வேனும்னா
சொல்லுங்க தோசை வேஸ்டாயிடும்

### நியாஸ்

காபி ஷாப்ல இன்னைக்கு உன்னை மாதிரியே ஒரு
பெண்ணைப் பார்த்தேன். அப்புறம் என்னசெஞ்சீங்க.



பயந்து போய் வேற கடையல
போய் காபி குடிச்சன்

### கந்தன்

எதுக்கு பையனுக்கு
1000 ரூபாய் கொடுத்தீங்க



ஏதோ பேஸ்புக் வாங்கனும் என்னு சொன்னான்.
பேஸ்புக் இல்லாமல் பையன் எப்படி படிப்பான்.

### சுராங்கா




விபரம் தெரியாம பேசாத தம்பி காதலிச்ச
புள்ளையயே கல்யாணம் பண்ணிப்பார் அப்
புறம் தெரியும் எதுல வலி அதிகம்னு

### நித்தியா

உலகத்திலேயே வேகமாக ஓடுவது எது ஹெியுமா?
புலி, சிறுத்தை.



அதான் இல்ல இந்த Sunday தான்.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் உரிமைகளை பாதுகாக்க கோரி வவுனியாவில் விழிப்புணர்வு நடைபவனி



(நெளுக்குளம்)

சிறுவர் உரிமைகளை பாதுகாக்க கோரி விழிப்புணர்வு நடைபவனியானது ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்கு முன்பாக நேற்றுக்காலை ஆரம்பமாகி நடை பெற்றது.

சிறுவர் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு சிறுவர் உரிமைகளை பாதுகாப்போம் எனும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வு பேரணியினை ஒட்டுசுட்டான் பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ம.வினோத் ஆரம்பித்து வைத்தார்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட குறித்த பேரணியானது நடை பவனியாக சென்று ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் நிறைவு பெற்றது.

"சிறுவர் துஷ்பிரயோகத்தை கண்டால் 1929 க்கு அழைப்போம்", "குழந்தைகள் பாலியல் பொருட்கள் அல்ல", "சிறுவர்களை தீய வார்த்தைகளால் பேசுவதை தடுப்போம்", "சிறுவர்களை மது போதை அடிமையிலிருந்து மீட்போம்", "வன்முறைகளில் இருந்து சிறுவர்களை நாம் பாதுகாப்போம்" போன்ற பல்வேறு பதாதைகள் தாங்கியவாறு குறித்த நடைபவனி இடம் பெற்றது. (4-6-299)




## நெஞ்சில் குடி கொண்ட வேலவா

புன்னகை பூத்த முகத்தழகன்
நெற்றிப் பொட்டழகன்
நீற்றுக் கட்டழகன்
மன்னிய காதில் குழையழகன்
திரு மார்பில் மதாணி இழையழகன்
நீலவண்ணச் சிவி அழகன்
மஞ்சள் நின்ற பசும்பொன் உடையழகன்
வேலை உயர்த்திய கையழகன்
மாலை திரு வீதி உலாவருவார்
நெஞ்சில் குடிகொண்ட வேலவனே-நாம்
நித்தம் வணங்கிடும்-வேலவனே

சி.ஜெயகௌரி.

## உன் வதனமதைக் காண மனம் அலையுதையா

அன்பும் அருளும் அவனிடத்தே- முருகா
பாரெல்லாம் உன் விம்பம் இருக்குதையா
உனைக்காண என் துன்பம் உருகுதையா
கரம் பற்றும் வழியொன்று கிடைத்திடுமா
உன்னை நாடி வர வழியில்லையா
கடலலை போல் அடியவர்
உன் அலங்காரம் காண மனம் மகிழுதையா
எட்டுத்திக்கும் நாத இசை முழங்குதையா
பக்தியோடு பாடல் இசைக்குதையா- உன்
அழகைக்காண மனம் அலையுதையா...

லோ.சிவதர்ஷினி
உரும்பிராய்.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

பேராசிரியர்.சோ.கிருஷ்ணராஜா நினைவுப்பேருரை-2023
(தத்துவவியற் பேராசிரியரும், முன்னாள் கலைப்பீடப் பீடாதிபதியும்)

பேருரைத் தலைப்பு :
"கார்ல் மார்க்ஸின் அழகியலில் கலைகளின் அடிப்படைகளும் அழகின் விதிகளும் - ஒரு சுருக்க விசாரணை"

பேருரை வழங்குனர் :
பேராசிரியர் எம்.எஸ்.எம்.அனஸ்,
ஓய்வு நிலைப் பேராசிரியர்,
தத்துவவியற் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

திகதி : 28.08.2023 (திங்கட்கிழமை)
பி.ப 3.00 மணி

நிகழ்விடம் : கைலாசபதி கலையரங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(சி-7125)


## நெல் கொள்வனவிற்காக முல்லை மாவட்டத்திற்கு 50 பில்லியன் ஒதுக்கீடு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு நெற்கொள்வனவுக்கென 50 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு, நெல்சந்தைப்படுத்தல் சபையால் நெல் கொள்வனவு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித்திணைக்கள உதவி ஆணையாளர் ஆர்.பரணீகரன் தெரிவித்துள்ளார்.

எனினும் அரிசித் தட்டுப்பாடு ஏற்படலாம் என்ற கருத்து நிலவுவதால் விவசாயிகள் நெல்லைச் சந்தைப்படுத்துவதில் ஆர்வமின்றிக் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நெல்சந்தைப்படுத்தல் சபையால் மேற்கொள்ளப்படும் நெற்கொள்வனவு தொடர்பில் ஊடகவியலாளர் வினவியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (4-6)

## இராசிபலன்

25.08.2023
ஆவணி 08, வெள்ளிக்கிழமை
நவமி முன்னிரவு 9.08 மணிவரை
கேட்டை பின்னிரவு 4.54 மணிவரை

சுபநேரம் -6.05-7.35 மணிவரை
இராகுகாலம்-10.35-12.05 மணிவரை
வரலட்சுமி விரதம்

சந்திராஷ்டமம்-கார்த்திகை


வளவன்


மேஷம்


வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, விரயங்கள் மேலோங்கும் நாள், மனதில் இனம்புரியாத மனச் சஞ்சலங்கள் தோன்றி மறையும், உடல் நலக் குறைவுகள் ஏற்படலாம்.


கடகம்

மற்றவர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.


துலாம்

பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், புத்திசாதூரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், பணப்புழக்கம் கூடும் நாள்.


மகரம்

பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், முன்னேற்றத்திற்கு உதவிய சிலரைச் சந்தித்து மகிழ்வீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்கள் கைகூடும்.


ரிஷபம்

நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக நடந்து கொள்வர், புதிய முயற்சிகள் கைகூடும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு.


சிம்மம்

பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, ஆன்மிக சிந்தனை அதிகரிக்கும்.


விருச்சிகம்

ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.


கும்பம்

வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே கைகூடும், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.


மிதுனம்

கனவு பலிதமுண்டு, சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.


கன்னி

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், மறக்க முடியாத சம்பவங்கள் இடம் பெறலாம், செயற்பாட்டில் வெற்றி கிடைக்கும், உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும்.


தனுசு

வழிபாட்டில் ஆர்வம் கூடும், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது,சுப விரயங்கள் மேலோங்கும் நாள், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள்.


மீனம்

எதிர்கால நலன்கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், திறமை மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மனக் குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள்.

நாம் செய்யும் தர்மம் நம்மையும் நம் பரம்பரையையும் காக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூவானம் ஈழத்திரைப்படம் 100 ஆவது நாள் நிகழ்வுகள்



(யாழ்ப்பாணம்)

பொது வைத்திய நிபுணர் சிவன்சுதனின் தயாரிப்பில், கலாநிதி.க. ரதிதரனின் இயக்கத்தில் உருவான ஈழத்திரைப்படம் தூவானம் யாழ்ப்பாணம் தொடக்கம் சர்வதேச நாடுகள் எங்கும் திரையிடப்பட்டு வரும் நிலையில் 100 ஆவது நாளின் கொண்டாட்ட விழா கடந்த 20 ஆம் திகதி மாலை யாழ். பல்கலைக்கழக கலையரங்கில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக சிவன் ஆலயத்தில் விசேட பூஜைகளைத் தொடர்ந்து அதிதிகள் கலைஞர்கள் அரங்கிற்கு அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து பிரதம அதிதியான யாழ்.பல்கலை துணைவேந்தர் சி.சிறீசற்குணராஜா மற்றும் வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர், வைத்தியக்கலாநிதிகள், கல்வி அதிகாரிகள் என பலரும் மங்கல விளக்கினை ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து தூவானம் திரைப்படத்தில் பணி புரிந்த அத்தனை கலைஞர்களையும் கௌரவித்து சான்றிதழ்கள், விருதுகள் என்பனவும் வழங்கப்பட்டன. (4-6-33)

# மணல் ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றின் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட மணல் எதிர்வரும், 2ஆம் திகதி மு.ப 10 மணிக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பிராந்திய ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னர் மணலினை பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிடமுடியும். ஏலவிற்பனையில் பங்குபற்றுபவர்கள் தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளித்தல் வேண்டும்.

ஏலத்தில் பொருளினைக் கொள்வனவு செய்பவர் உடனடியாக கொடுப்பனவினை பணமாக செலுத்தி ஏலப்பொருளினை மட்டும் அப்புறப்படுத்த வேண்டும். கொடுப்பனவுகள் பணமாக மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும் என்பதுடன் காசோலைகள் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4)

# நல்லூர் உற்சவ கால தெய்வீக இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். இளங்கலைஞர் மன்றத்தின் நல்லூர் முருகன் உற்சவ கால தெய்வீக இசை அரங்கு நிகழ்வில் நாளை 26 ஆம் திகதி மாலை 6.45 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் வீணா இசை இடம்பெறவுள்ளது.

இதன்போது வீணை- பா.தர்சிகா, ச.சங்கீதா, த.காகிலா,கி.பிரியா,ரா.யுவமதி .அ. டுபிசனா, த. சுகாஞ்சலி மற்றும் ஆ. கோபிகாவும் மிருதங்கம் -சி. வேணுகாந் ஆகியோர் இசைக்கவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இரவு 7.15 மணிக்கு இடம் பெறவுள்ள இசையரங்கில் யதுநந்தினி மணிவண்ணன் பாட்டு பாடவுள்ளதுடன் வயலின்- ப. சியாமகிருஷ்ணா, மிருதங்கம்- கி. அனந்தகோபன், கஞ்சிரா-மு. சுலக்சன் மற்றும் முகர்சிங்- நி. மோகனதர்சன் ஆகியோர் இணைந்து இசைக்கவுள்ளனர். (4)

# பழங்கள், இளநீர் விற்பனை யாழில் கடும் வீழ்ச்சி

(அராலி)

நாட்டில் அதிக வெப்ப நிலையுடனான வறட்சியான காலநிலை நிலவும் நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் பழங்கள், இளநீர் என்பவற்றின் விலை உயர்வின் காரணமாக வியாபாரம் இடம் பெறவில்லை என வர்த்தகர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக வெப்ப காலத்தில் பொதுமக்கள் பழம் வாங்க வருவார்கள். தற்பொழுது பழங்களின் விலையினை கேட்டு விட்டு சென்று விடுகின்றார்கள். ஏனென்றால் விலை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக எமது வியாபாரம் மற்றும் முழுதாக பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக யாழ்ப்பாண குடா நாட்டில் வெப்ப காலத்தில் பழங்கள், இளநீர் வியாபாரம் அதிகளவில் இடம்பெறும். எனினும் தற்போது பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக பழங்களின் விலை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக பழம், இளநீர் வியாபாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளனர். (4-6-104)

# யோகக்கலை கற்கைநெறியின் புதிய பிரிவு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டிற்காக இலவசமாக நடத்தப்பட்டுவருகின்ற யோகக்கலை அடிப்படை கற்கை நெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் செப்டம்பர் 23 ஆம் திகதி காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணி முதல் காலை 8 மணி வரை நடைபெறும் இவ்வகுப்புகளில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்து கொள்ள முடியும்.

சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இவ் அடிப்படைக் கற்கை நெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

பயிலவிரும்புவோர் இளைஞர் விவகார அலகில் விண்ணப்பப்படிவங்களை பெற்று கல்வி அமைச்சு , வட மாகாணம், இளைஞர் விவகார அலகு, செம்மணிவீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் ம. பற்றிக்டிறஞ்சன் அறிவித்துள்ளார். (4-6)

# நூல் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

ஊடகர் பி.விக்னேஸ்வரனின் " நினைவு நல்லது" நூல் அறிமுக விழா எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் தலைமையில் இடம் பெறவுள்ளது. (நி)

# மரண அறிவித்தல்

பிறப்பு 04 - 05 - 1957



இறப்பு 24 - 08 - 2023

அமரர். சிங்கவேலு ஐங்கரன்

நல்லூரை பிறப்பிடமாகவும் யமுனாவீதி கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கவேலு ஐங்கரன் அவர்கள் நேற்று (24.08.2023) காலமானார்.

அன்னார் காலம் சென்ற சிங்கவேலு தேவசேனா தம்பதிகளின் அன்பு மகனும் புஸ்பவதி அவர்களின் அன்புக் கணவரும் சிவசாந்தன் (Dotline Colour Lap ஊழியரும்.சுயாதீன ஊடகவியலாளர்), பிரசாந்தன் (சந்தோஷ் ஜுவல்லரி ஊழியர்), சௌமியா ஆகியவர்களின் அன்பு தந்தையும் சஜீபனின் அன்பு மாமனாரும் சாயிஷா அவர்களின் அன்பு பேரனும் காலம் சென்றவரான அமரர் ரகுநாதனும் வித்தியாதரன், சண்முகதாஸ், விஜயகுமாரி ஆகியவர்களின் அன்பு சகோதரனும் ஆவார்.

அன்னாரது இறுதி கிரியைகள் 25.08.2023 இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இந்த தகவலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

76, யமுனா வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு-076 323 4462

தகவல்
குடும்பத்தினர்

# நெடுந்தீவின் குமுதினிப்படகு நேற்று முதல் மீள் சேவையில்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவின் பிரதான போக்குவரத்து மார்க்கமான குமுதினிப் படகு நேற்று வியாழக்கிழமை முதல் மீண்டும் பயணிகள் சேவையில் ஈடுபட ஆரம்பித்துள்ளது.

யாழ்ப்பாணம், குறிகட்டுவான் மற்றும் நெடுந்தீவு பயணிகளுக்கான கடல்வழிப் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபட்ட குமுதினி படகு அடிக்கடி செயலிழந்த நிலையில், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் குமுதினி படகின் திருத்தப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

குமுதினிப் படகு 1968 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணம் - நெடுந்தீவிற்கான போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-104)

# கௌரவிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி உபஅதிபர் பா. சண்முகத்தின் சேவையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு, நாளை சனிக்கிழமை சங்கரத்தை கரந்தைக் குளவத்தை முருகன் ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட்டு. மத்திய கல்லூரி முன்னாள் அதிபர் ந. சபாரட்ணசிங்கி கலந்து கொள்ளவுள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத நல்லிணக்கத்தைக் கெடுக்கும் செயல்களுக்கு ஆதரவளிக்காதீர்!

## நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் மக்களிடம் வலியுறுத்து

(கொழும்பு)

சமாதானத்துக்கும் மதங்களுக்கும் இடையிலான நல்லிணக்கத்துக்கும் குந்தகம் விளைவிக்கக்கூடிய எந்தவொரு நடவடிக்கைக்கும் ஆதரவளிக்க வேண்டாம் என்று முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய நாட்டு மக்களிடம் வலியுறுத்தியுள்ளார்.

வடமாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் பௌத்த விகாரை கட்டுமானங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய முறுகல் நிலை என்பன அண்மையகாலங்களில் தீவிரமடைந்து வருகின்றன. இவ்வாறானதொரு பின்னணியில் தமது இயக்கமாகிய சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் சார்பில் கருஜயசூரிய, அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அதில் மேலும் கூறியிருப்பதாவது:

அண்மைக்காலங்களில் இலங்கையின் தேசிய மற்றும் மத நல்லிணக்கத்துக்குப் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடியவாறான பல சம்பவங்கள் இடம்பெற்று வருவது குறித்து நாம் மிகுந்த மனவேதனை அடைகின்றோம்.

அதேவேளை நாட்டின் சமாதானத்துக்கும் மதங்களுக்கும் இடையிலான நல்லிணக்கத்துக்கும் குந்தகம் விளைவிக்கக்கூடிய எந்தவொரு நடவடிக்கைக்கும் ஆதரவளிக்க வேண்டாம் என்று நாட்டு மக்களிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓடுவதற்கு வழிவகுக்கக்கூடிய செயற்பாடுகளுக்கு வெறுமனே வார்த்தையில் கூட ஒத்துழைப்பு வழங்க வேண்டாமென வலியுறுத்துகின்றோம்.

ஆன்மிக போதனைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கும் மார்க்கங்கள் மகத்துவமாகக் கருதும் அனைத்து மதச் சின்னங்களும் ஒட்டுமொத்த சமுதாயத்துக்குமான புனித சொத்துக்களாகும்.

அவை குறித்த ஒரு இனத்துக்கோ அல்லது மதத்துக்கோ சொந்தமான பௌதிக வளங்கள் அல்ல என்பதை நாம அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

அதுமாத்திரமன்றி பல பெறுமதியுடைய சின்னங்கள், கட்டமைப்புக்களை ஒட்டு மொத்த சமுதாயத்துக்குப் பெருமை சேர்க்கும் உலக மரபுரிமைகளாகக் கருத வேண்டும்.

நாடொன்றின் பெருமை அல்லது மதத்தின் மகத்துவம் என்பன அவற்றின் ஊடாக உலகுக்குக் கிட்டும் நன்மைகள் மற்றும் வழிகாட்டல்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றது.

ஆனால் அந்த மகத்துவம் அடிப்படைவாத, ஆதிக்க சிந்தனையுடைய செயற்பாடுகளால் இழிவுபடுத்தப்படுகின்றது.

எனவே தமது நாடு மற்றும் மதத்தின் மீது உண்மையான பற்றுக் கொண்டவர்கள் அனைவரும் அடிப்படைவாதிகளின் சூழ்ச்சிகளுக்கு இலக்காகாமல் செயற்பட வேண்டும் என்று அவ்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (நி)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 24 (பழைய வட்டாரம் 04) ஆஸ்பத்திரி வீதி, ஆதன இலக்கம் 740 என்னும்.வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் மயாரி மரியா அன்ரெனற்றி புவிராஜசிங்கியும் கிளரென்ஸ் ஸ்ரான்லி பேற்றியும் சவரிமுத்துவும் என ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

திருச்செல்வம் அருள்நாயகம் கைம்பெண் பிலோமினா என்பவர் 31.122012 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு யோகநாதன் - சத்தியநாதன் முகதாவில் 3106 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட பிரகடன உறுதி மூலம் குறித்த ஆதனத்தில் 1957.09.16 ஆம் திகதி தொடக்கம் குடியிருந்து வருவதாக வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த ஆதனத்தை 2016.10.31 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு இராஜேந்திரன் இராஜேஸ்வரன் முகதாவில் 3944 ஆம் இலக்க உறுதி மூலம் திருச்செல்வம் அருள்நாயகம் கைம்பெண் பிலோமினா என்பவர் நிபந்தனை அறுதியாக மாணிக்கம் ராசரத்தினத்திற்கும் பெண் யோகேஸ்வரிக்கும் விற்றுள்ளார்.

பின்பு குறித்த ஆதனம் 30.04.2017 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு இராஜேந்திரன் இராஜேஸ்வரன் முகதாவில் 4599 ஆம் இலக்க உறுதி மூலம் மாணிக்கம் இராசரத்தினம் பெண் யோகேஸ்வரி ஆகியோரால் அறுதியாக (நிபந்தனை அறுதி சாட்டுதல்) திருச்செல்வம் அருள்நாயகம் கைம்பெண் பிலோமினா அவர்கள் சார்பில் அவரது மகள் ஜீலியற் மரீனா என்பவருக்கு மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளது.

### ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கரையூர் இறை யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவு யாழ்ப்பாணம் மாநகரசபை கிராமசேவையாளர் பிரிவு J/74 இல் யாழ். நகர் கிழக்கில் அமைந்துள்ள "இடையன் தறை" என அழைக்கப்படும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் S.புஷ்பராஜா அவர்களால் 2014.03.18 ஆம் திகதி கொண்ட வரைபட இலக்கம் 4014 இல் துண்டு 1 என அடையாளமிடப்பட்ட நிலப்பரப்பு இரண்டும் குளி இரண்டு தசம் ஐந்தும் (நில.பர2ம் குளி 02.50 இற்கும் எல்லைகள்.

கிழக்கு : கணேசலிங்கம் மனைவி பிரியதர்ஷினிக்குரிய ஆதனம்.
வடக்கு : ஆஸ்பத்திரி வீதி.
மேற்கு : அன்ரன் மனைவி சோதிக்குரிய ஆதனம்.
தெற்கு : சுப்பிரமணியம் மனைவி நல்லம்மாவிற்குரிய ஆதனமும் இதடங்கலும், இதைச் சேர்ந்தவைகளும்.

தற்போது ஜீலியற் மரினா கிறிஸ்துராஜா இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது ஜீலியற் மரினா கிறிஸ்துராஜா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பிரச்சினைகளுக்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத் தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**யாழ்.மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(ள-7123)

## பால்மாவின் விலை 300 ரூபாவால் குறைப்பு?

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் பால்மாவின் விலை 300 ரூபாவால் குறைக்கப்பட வேண்டும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது, அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இறக்குமதி செய்யப்படும் பால்மா விலையை குறைப்பதற்கான தலையீடுகளை தாம் மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-5)

## மயக்க வாயுக்களுக்கு நாட்டில் தட்டுப்பாடு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் சத்திர சிகிச்சைக்கு முன்னர் நோயாளர்களுக்கு மயக்கமூட்டுவதற்கு பயன்படுத்தப்படும் மயக்க வாயுக்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அகில இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஜயந்த பண்டார தெரிவித்துள்ளார்.

மயக்க வாயுக்கள் தட்டுப்பாடு காரணமாக நுவரெலியா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை இரண்டு நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

## ராஜபக்ஷக்களின் மீள்வருகையை நிராகரிக்க முடியாது

### மிலிந்த மொறகொடவின் கருத்தால் பரபரப்பு

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு ராஜபக்ஷக்களுக்கு அனுமதி வழங்கப்படும் என இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொறகொட தெரிவித்தார்.

இந்திய ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

2022 இல் பொருளாதார நெருக்கடியை தொடர்ந்து மிகப் பெரும் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக பதவியிலிருந்து அகற் றப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் குறித்து மக்கள் மத்தியில் கடும் அதிருப்தி காணப்படுகின்ற போதிலும் 2024 ஜனாதிபதி தேர்தலில் ராஜபக்ஷக்களுக்கு போட்டியிடுவதற்கான அனுமதி வழங்கப்படும். இலங்கை ஒரு ஜனநாயக நாடு. தற்போதைய அரசாங்கத்தில் ராஜபக்ஷக்களின் பிர திநிதித்துவம் உள்ளது.

அதேவேளை அரசாங்கத்தில் ராஜபக்ஷக்களின் குடும்பத்தவர்கள் பலர் உள்ளனர் எனவும் அவர்களின் மீள் வருகையை நிராகரிக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார். (நி)

## எச்.ஐ.வி தொற்றாளர்கள் 48 சதவீதமாக அதிகரிப்பு

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த வருடம் எச்.ஐ.வி தொற்றாளர்களின் எண்ணிக்கை 48 சதவீதமாக அதிகரித்துள்ளதாக தேசிய பாலியல் நோய் மற்றும் எய்ட்ஸ் ஒழிப்பு வேலைத்திட்டம் தெரிவித்துள்ளது.

15 முதல் 19 வயதுக்கு இடைப்பட்டோர் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளாகின்றமை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இதுவரை நான்காயிரத்து நூறு எச்.ஐ.வி தொற்றாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதாக எய்ட்ஸ் ஒழிப்பு வேலைத்திட்டம் தெரிவித்துள்ளது. (நி-5)

## காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு 6 மாதத்திற்குள் தீர்வு - மகேஷ் கட்டுலந்த

(கொழும்பு)

இலங்கையில் காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு 6 மாத காலத்திற்குள் நீதி வழங்கப்படும் என காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தின் தலைவர் சட்டத்தரணி மகேஷ் கட்டுலந்த தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டபோதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

காணாமல்போனோர் தொடர்பான அலுவலகம், காணாமல் போனவர்கள் தொடர்பான முதல் கட்ட விசாரணைகளை எதிர் வரும் டிசெம்பர் மாதத்திற்குள் நிறைவு செய்துவிடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முதல் கட்ட விசாரணைகள் நிறைவடைந்தவுடன், காணாமல் போனவர்களின் சான்றிதழ்கள், அல்லது இறப்புச் சான்றிதழ்களைப் பெறத் தயாராக இருக்கும் காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கு உரிய சான்றிதழ்கள் வழங்கப்படும்.

அத்துடன் கொடுப்பனவுகளைப் பெற விரும்பும் உறவினர்கள், காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில், இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் மூலம் உரிய கொடுப்பனவுகளைப் பெறுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் நாட்டில் காணாமல் போனவர்களின் எண்ணிக்கை 14 ஆயிரத்து 988 காணப்படுவதாக காணாமல் போனோர் அலுவலகத்தின் தலைவர் சட்டத்தரணி மகேஷ் கட்டுலந்த தெரிவித்துள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## சந்திராயன்–3 இற்கு குவியும் பாராட்டுக்கள்

### சந்திராயன் 3 திட்டத்தில் கூட்டாளியாக இருப்பதில் பெருமையடைகிறோம்-நாசா



சந்திராயன்-3, நிலவின் தென்துருவத்தில் வெற்றிகரமாக தரையிறங்கியதற்காக இஸ்ரோ வுக்கு வாழ்த்துகள். நிலவில் விண்கலத்தை மெதுவாக தரையிறக்கிய 4 ஆவது நாடு என்ற பெருமையை பெற்ற இந்தியாவுக்கும் வாழ்த்துகள். இத்திட்டத்தில் உங்களின் கூட்டாளியாக இருப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

### இந்தியாவின் வருங்கால வளர்ச்சியின் உதயம் - இந்திய பிரதமர் மோடி



இந்தியாவின் காலடி நிலவில் பதிந்திருப்பது ஒட்டுமொத்த நாட்டையும் உற்சாகமடைய வைத் துள்ளதாகவும் ஒவ்வொரு வீட்டிலும் பெருமிதம் பொங்குகிறது என்றும் மேலும் இந்தியா வரலாறு படைத்ததாகவும் இந்தியாவின் வருங்கால வளர்ச்சியின் உதயமாக இச்சாதனை திகழ்வதாகவும் தெரிவித்தார்.

### அருமையான ஒரு தருணம் - கூகுள் நிறுவனத்தின் தலைமை அதிகாரி சுந்தர் பிச்சை



என்னவொரு அருமையான தருணம், சந்திரா யன்- 3 விண்கலத்தை நிலவில் வெற்றிகரமாக தரையிறக்கிய இஸ்ரோவுக்கு வாழ்த்துகள்.

இந்தியா இன்று (நேற்று முன்தினம்) முதல் நாடாக நிலவின் தென்துருவத்தில் சந்திராயன் -3 விண்கலத்தை வெற்றிகரமாக தரையிறக்கி சாதனை படைத்துள்ளது என பதிவிட்டுள்ளார்.

### வியத்தகு முன்னேற்றத்தின் சான்று சந்திராயன்-3-ரஷ்ய ஜனாதிபதி




இந்தியாவின் சந்திராயன்-3 விண்கலம் தென் துருவத்திற்கு அருகில் நிலவில் வெற்றிகரமாக தரையிறங்கியதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக் கள். விண்வெளியை ஆராய்வதில் இது ஒரு நீண்ட முன்னேற்றம். அறிவியல் மற்றும் பொறியியலில் இந்தியா அடைந்துள்ள வியத்தகு முன்னேற்றத்திற்கான சான்றாகும் இது என வாழ்த்தியுள்ளார்.

### இலட்சியங்கள் இருந்தால் உலகை மாற்ற முடியும்-பாகிஸ்தான் முன்னாள் மந்திரி



"சந்திராயன்-3 நிலவில் வெற்றிகரமாக தரையிற ங்கியது இஸ்ரோவிற்கு மிகவும் அருமையான தருணம். இந்த வெற்றியை இஸ்ரோ தலைவர் சோம்நாத் மற்றும் பல இளம் விஞ்ஞானிகள் மகிழ்ச்சியுடன் கொண்டாடியதை பார்த்தேன். இலட்சியங்கள் நிறைந்த இளம் தலைமுறையால் மட்டுமே உலகத்தை மாற்ற முடியும். வாழ்த்து க்கள்" எனப் பதிவிட்டுள்ளார்.

### பங்குதாரர்களாக இருப்பதில் பெருமிதம்-அமெரிக்க துணை ஜனாதிபதி




நிலவின் தென்துருவப் பகுதியில் வரலாற்றுச் சிறப்பு மிக்க சந்திராயன் -3 விண்கலம் தரையிறங்கிய தற்கு சம்பந்தப்பட்ட அனைத்து விஞ்ஞானிகள் மற்றும் பொறியியலாளர்களுக்கு இது ஒரு நம்பமுடியாத சாதனையாகும் என் றும் விண்வெளி ஆய்வில் உங்களுடன் பங்குதாரர்களாக இருப்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம் எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

---

இந்தியாவின் மிசோரம் மாநிலத்தில்

## ரயில் மேம்பாலம் இடிந்து வீழ்ந்ததில் 17 பேர் உயிரிழப்பு, பலர் மாயம்



(டில்லி)

இந்தியாவின் மிசோரம் மாநிலத்தில் புதிதாக கட்டப் பட்டு வந்த ரயில்வே மேம் பாலம் இடிந்து வீழ்ந்ததில் 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

மிசோரம் மாநிலம் - சாய்ராங் பகுதியில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ள துடன், பலர் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என அஞ்சப் படுகிறது.

மிசோரம் தலைநகர் அய்சா லில் இருந்து சுமார் 21 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சாய்ரங் பகுதியில் நேற்று முன்தினம் மு.ப 11 மணிக்கு மேம்பாலம் இடிந்து வீழ்ந்து ள்ளது.

விபத்து நடந்த போது அங்கு 40 தொழிலாளர்கள் பாலத்தில் வேலை செய்து வந்ததாக கூறப்படுகிறது.

இடிபாடுகளில் இருந்து இதுவரை 17 பேரின் உடல் கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் பலர் காணாமல் போயிருப்ப தாகவும் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

விபத்திற்கான காரணம் குறித்து இதுவரை கண்ட றியப்படவில்லை. இடிபாடு களில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணிகள் தொடர்ந் தும் இடம்பெற்று வருகின் றன. (நி-5)

## சந்திராயன்-3 வெற்றிக்கு வித்திட்ட தமிழன்



(டில்லி)

நிலவின் தென் துருவத்தில் சந்தி ராயன்-3 விண் கலம் தரையிற ங்கி சாதனை படைக்கும் நிலை க்கு வித்திட்டவர் ஒரு தமிழர் என் பது தெரிய வந்துள் ளது.

தமிழ் நாட்டைச் சேர்ந்த வீரமுத்துவேல் என்ற விஞ் ஞானியே அவராவார்.

சந்திராயன்-3 திட்டத்தின் இயக்குநராக 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 9 ஆம் திகதி இவர் நியமிக்கப்பட் டார்.

இவர் கண்டறிந்த இந்த தொழில்நுட்பம் நிலவில் லேண்டரை தரையிறக்கு வதற்கும் ரோவரை இயக்கு வதற்கும் உதவிகரமாக இரு க்கும் என கூறப்பட்டது. இத னால் அந்த தொழில்நுட்பம் அனைவராலும் பாராட்டப்பட் டது.

இது வே வீரமுத்துவேலை 2019 ஆம் ஆண்டு சந்திராயன்-3 திட்ட இயக்குநராக்கியது. சந்திராயன் -2 திட்டத்திலும் வீர முத்துவேல் முக்கிய பங்காற்றினார்.

இவரது மேற்பார் வையில் உருவாக் கப்பட்டுள்ள சந்தி ராயன்-3 வெற்றி கர மாக விண்ணில் ஏவப்பட்டு நிலவில் கால் பதித்தது.

ஏற்கனவே சந்திராயன்-1, சந்திராயன்-2 ஆகிய திட்டங் களிலும் தமிழர்களே திட்ட இயக்குநராக இருந்துள்ள னர்.

இதன் தொடர்ச்சியாக, சந்திராயன்-3 திட்டத்தி லும் தமிழ்நாட்டை சேர்ந்த வீர முத்துவேல் இடம் பெற்றது தமிழர்களிடையே பெருமையை சேர்த்துள் ளது. (நி-5)

---

## உள்ந

## கடும் நெ

❖ 500 குழ

❖ 2400 கு

சிறுவர் பா

(கார்தோம்)

சூடானில் தொடரு பொருளாதார நெ உயிரிழந்துள்ளதா ஆழ்த்தியுள்ளது.

கிழக்கு ஆபிரிக்க நாடான சூடா னில், இராணுவத்துக்கும், துணை இராணுவப் படைக்கும் இடையே கடந்த ஏப்ரல் மாதம் மோதல் வெடித்தது. இது மிகப் பெரிய அள வில் உள்நாட்டுப் போராக உரு வெடுத்துள்ளது. இதனால் தலை நகர் கார்தோம் உள்ளிட்ட பல நகர ங்கள் போர்க்களங்களாக காட்சி அளிக்கின்றன.

இந்த உள்நாட்டு போர் தொடர் வதால் நாட்டில் மிகப்பெரிய அளவில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள் ளது. அங்கு நிலவிவரும் அசாதார ணமான சூழ்நிலை காரணமாக பொதுமக்கள் குடிநீர், மின்சாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இன்றி தவிக்கின்றனர். நாட்டின் சுகாதார வசதி முற்றிலுமாக முடங்கியுள்ளது. சரியான உணவு கிடைக்காமல் பொதுமக்கள் தவித்து வரும் நிலை

## வாக்னர் குழுத் விமான வி

(மொஸ்கோ)

ரஷ்யா ஜனாதிபதி புடினுக்கு எதி ராக சில தினங்களுக்கு முன்பு கிளர் ச்சியில் ஈடுபட்டவாக்னர் குழு வின் தலைவர் உயிரிழந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ட்வெர் பிராந்தியத்தில் நடந்த விமான விபத்தில் 9 பேர் உயிரிழ ந்த நிலையில், அவர்களில் வாக்னர் குழு தலைவர் யெவ் ஜெனி பிரிகோ ஜினும் அடக்கம் என ரஷ்ய அரசின் விமானப் போக்குவரத்து நிறுவன மான ரோசா வியாட்சியா தெரிவித்து ள்ளது.

ரஷ்யாவில் இயங்கி வரும் தனி யார் இராணுவ அமைப்பான வாக் னர் குழு ஒரு கூலிப்படை. உள்நாட் டுப் போரில் ஒப்பந்தத்தின் அடிப்படை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# நாட்டுப் போரால்

# நெருக்கடிக்குள் சூடான்

## குழந்தைகள் பட்டினியால் பலி
## குழந்தைகள் வைத்தியசாலையில்

### பாதுகாப்பு நிதியம் அதிர்ச்சித் தகவல்

**டரும் உள்நாட்டு போர் காரணமாக நிலவும் கடுமையான நெருக்கடியால் சுமார் 500 குழந்தைகள் பட்டினியால் தாக தகவல் வெளியாகி உலகத்தை அதிர்ச்சியில் ப.**

யில் அந்நாட்டு குழந்தைகள் பட்டினியால் உயிரிழந்து வருகின்றனர்.

சூடானில் இயங்கிவரும் "சிறுவர் பாதுகாப்பு நிதியம்" என்ற அமைப்பு வெளியிட்டுள்ள ஆய்வு அறிக்கையில் குழந்தைகள் சாவு பற்றிய விபரங்களை தெரிவித்துள்ளதால் அதைக்கண்டு உலகம் அதிர்ச்சி அடைந்துள்ளது. "பட்டினியால் தினமும் குழந்தைகள் உயிரிழப்பதை காண்கிறோம். கடந்த மே முதல், ஜூலை வரையில், 316 குழந்தைகள் பட்டினியால் உயிரிழந்துள்ளனர். இதில் பெரும்பாலான குழந்தைகள் 5 வயதுக்கும் குறை வானவர்கள். ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக, 2,400 குழந்தைகள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு கடாரிப் மாகாணத்தில் உள்ள அரசு குழந்தைகள் வைத்தியசாலையில், 132 குழந் தைகள் ஊட்டச்சத்து குறை பாட்டால் ஏப்ரல் முதல், ஜூலை வரையிலான காலத்தில் உயிரிழந்தனர்.



தலைநகர் கார்தோமில் உள்ள அரசு ஆதரவற்றோர் இல்லத்தில், 20 இற்கும் மேற்பட்ட கைக்குழந்தைகள் உட்பட 50 குழந்தைகள் பட்டினியால் உயிரிழந்துள்ளனர்.

ஊட்டச்சத்து குறைபாட்டுக்கு சிகிச்சை பெற முடியாமல், 31,000 குழந்தைகள் தவித்து வருகின்றனர்" என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி-5)

# ழுத் தலைவர் உட்பட 9 பேர் விபத்தில் உயிரிழப்பு



யில் அரசாங்கத்துக்கு ஆதரவாக இந்த் குழுவினர் இயங்குவது வழக்கம்.

இந்தக்குழு உலகம் முழுவதும் சட்டத்திற்கு புறம்பாகவே செயற்படுகிறது. உக் ரைனின் கிழக்குப் பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்ட போது வாக்னர் ஆயுதக் குழுவை ரஷ்யா பயன்படுத் திக் கொண்டது. இது ஒரு மூர்க்கமான ஆயுதக்குழு.

டிமிட்ரி உக்டின் என்ற முன்னாள் ரஷ்ய அதிகாரி மற்றும் யெவ்ஜின் ப்ரிகோஸின் என்ற புடினின் முன்னாள் தலைமை சமையல் நிபுணர் ஆகியோர் இணைந்து 2014 இல் இந்தப் படையை உருவாக்கினர். கிரிமியாவை ரஷ்யாவுடன் இணைக்கும் போரில் 'தி வாக்னர்' ஆயுதக் குழு பெரும் பங்காற்றியது.

அண்மையில் இந்தக் குழு ரஷ்ய அரசுக்கு எதிராக திரும்பியது. பல்வேறு இடங்களில் வாக்னர் குழுவினர் தாக்குதல் நடத்தினர். இதனால் பெரும் பதற்றம் நிலவியது.

உக்ரைன், ரஷ்யா போருக்கு இடையே வாக்னர் குழு ரஷ்யாவை தாக்கியது புடினுக்கு பின்னடைவாக பார்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரி-5)

## முகநூல் தரிசனம் 186

### இருப்பதைக்கொண்டு நிறைவாக வாழ்வதை கற்றுக்கொள்

எனது காரை சர்வீஸ் செய்ய கொடுத்து இருந்தேன். திடீரென அவசரமாக ஊருக்கு கிளம்ப வேண்டிய சூழல். ஆபிஸ் வேலை நீண்டு கொண்டே இருந்தது. வேலை முடிந்து திரும்பி பார்க்கையில் இரவு 11.15 மணி. ஓலோ ஆட்டோவை பதிவு செய்ய போட்டால் கேன்சல் செய்துகொண்டே இருந்தார்கள். வேறு வழியில்லாமல் வெளியே வந்து ஆட்டோவிற்காக காத்திருந்த போது கோயம்பேட்டிற்கு ஒரு ஆட்டோகார புண்ணியவான் நுங்கம்பாக்கத்தில் இருந்து 500ரூ கேட்டார். யாரும் 400ரூபாய்க்கு குறைவாக வரவில்லை. சரி பார்க்கலாம் என்று நின்று கொண்டு இருந்தபோது மெதுவாக ஒரு ஆட்டோ வந்து என் அருகில் நின்றது. ஒரு 70 வயதுள்ள முதியவர் எங்கு போகணும் என்று கேட்க , நான் கோயம்பேடு என்று கூற, அவர் சரி தம்பி மீற்றர் போடுறேன் .இரவு நேரம் என்றதால 1- 1/2 மீற்றர் என்று கூற, நான் ஸ்தம்பித்து நின்றேன். சென்னையில் முதல் முதலாக ஒரு ஆட்டோ ட்ரைவரே இப்படி கேட்டது எனக்கு இதுவே முதல் முறை.

அவர் யூனிபார்ம்ல இல்லாததால் என்ன தாத்தா, எங்க யூனிபார்ம். இந்த நேரத்துல இந்த வயசுல வண்டி ஓட்டுறீங்க என்று கேட்க, தம்பி வரும்போது ஏதோ ஞாபகமறதில வீட்டில இருந்து 10 ம்ணிக்கு கிளம்பும்போது போட மறந்துட்டேன் என்று கூற , எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

பிறகு சொன்னார். தம்பி 46 வருஷமா ஆட்டோ ஓட்டுறேன். சென்னைல மூல முடுக்கு வரை தெரியும். தைரியமாக வாங்க என்று கூற நான் சிரித்தேன்.

பிறகு என்னத்த தாத்தா படுத்து ஓய்வு எடுத்து தூங்க வேண்டிய வயசுல இப்படி இன்னும் உழைக்கிறீங்கனு நான் கேட்க, எனக்கு ஒரே ஒரு மகன் தம்பி. ஆட்டோ ஓட்டி தான் படிக்க வெச்சேன். நல்லா படிச்சான். நல்ல வேலையும் கிடைச்சது. ஒரு கல்யாணத்த பண்ணிட்டா நம்ம கடமை முடிஞ்சது. பிறகு நம்பள பாத்துப்பான்னு நினைச்சேன். கல்யாணம் ஆகி 18 வருஷம் கழிச்சு பிறந்த பிள்ளை அவன். இப்ப வரைக்கும் அவ்வளவு உசுரு அவன் மேல எனக்கு. அவனுக்கு கல்யாணம் ஆன பொறவு எதுவும் சரியில்ல. சரி நீ நிம்மதியா இருடான்னு தனியாக போகசொல்லிட்டேன். விருப்பமே இல்லாமல்தான் போனான். அப்பப்ப வந்து எங்கள பார்ப்பான்.

அதுக்குள்ள என் மனைவிக்கும் முடியல. பகல் பூரா அவங்க கூட இருந்து அவங்கள பார்த்துப்பேன். பகல்ல அவ்வளவு வெக்கயா இருக்கும். இந்த டிராபிக்ல என்னால வண்டி ஓட்ட முடியாது. கண்ணு கொஞ்சம் நல்லா இருக்கு. அதனால் ராத்திரி 9 மணில இருந்து காலைல 4 மணிவரைக்கும் ஆட்டோ ஓட்டிட்டு வீட்டுக்கு போய்டுவேன். சொந்த ஆட்டோ தம்பி இது. என் முழு 45 வருட உழைப்பு. ஒரு நாளைக்கு 600 ரூபாய் நிக்கும். எனக்கும் என் பொண்டாட்டிக்கும் அதுவே போதும். இத்தன வயசுக்கு மேல எனக்கு எதுக்கு தம்பி அளவுக்கு மீறி பணம் வேணும். ஒரு நாள் 600 ரூ வருதா சரி சூப்பர். இல்ல ஒரு நாள் ரூ 300 தான் வருதா. ஆண்டவன் இன்னைக்கு இவ்ளோதான் படி அளந்திருக்கான். நாளைக்குபத்தி இன்னைக்கே எதுக்கு யோசிக்கணும் என பேசிக்கொண்டே சென்றார்.

ஏன் உங்க பையன் உங்களுக்கு எதுவும் ? என நான் கேட்க,

அவன் மவராசன் தம்பி..!! எப்பவுமே என் ராசா...!! இப்பவரைக்கும் அவன் கொடுத்தாலும் கொடுக்கலனாலும் தங்கமான மகன் அவன் என்று மகனை விட்டு கொடுக்காமல் பேசினார்..!!

பற்றற்ற தன்மை என்று பலர் சொல்லி செயல்படுத்த முடியாத மிகப்பெரிய விடயத்தை எதையும் படிக்காத ஒரு எளிய மனிதர் எனக்கு பாடம் எடுத்து கொண்டு இருந்தார்.

கோயம்பேடு அதற்குள் வந்துவிட மீற்றரில் 130 ரூபாய் காட்டியது. நான் இறங்கும் போது 1-1/2 மீற்றர் காசாக ரூ 200 கொடுக்க. தம்பி இந்தாங்க மீதி 50 ரூபாயை கொடுத்தார்.

உங்களுடன் ஒரு போட்டோ எடுத்து கொள்ளட்டுமா என்று நான் கேட்க, தம்பி என் வாழ்க்கைல இப்படி கேட்ட முதல் ஆள் நீங்கதான். இப்ப ஆட்டோவில் வர்றவங்க எல்லாம் யாரும் வாயை திறந்து எங்ககிட்ட பேசறது கூட இல்ல. மொபைல்போன நோண்டிகிட்டே வருவாங்க. சக மனுஷனா கூட எங்கள பார்க்கமாட்டாங்க. நீங்க ரொம்ப நல்லா பேசிக்கிட்டு வந்தீங்க என்றார்.

ஒரு மனிதன் வாழ்வது முக்கியமல்ல. திருப்தியுடன் நிறைவாக எப்படி எதுவுமே இல்லையென்றாலும் கூட வாழ வேண்டும் என்ற வாழ்வின் தத்துவத்தை அந்த எளிய மனிதர் சொல்லாமல் சொல்லிவிட்டு சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வைத்தியசாலை அபிவிருத்திச்சபை எனும் தொண்டு அமைப்பின் அனுசரணையில் நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் 40 மில்லியன் பெறுமதியான ஒரு தொகுதி மருத்துவப் பொருட்கள் மற்றும் உபகரணப் பொருட்கள் கையளிக்கப்பட்டன. (படம்: ஜோசப்நயன்)

### வவுனியாவில் திடீர் சோதனை

# போலி வைத்தியசாலைகளை நடத்திய இருவர் கைது

(குருமன்காடு)

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினரும், பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது முறைகேடான வகையில் இரு தனியார் வைத்தியசாலைகளை நடத்திய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர் என சுகாதாரப் பிரிவினர் நேற்று தெரிவித்தனர்.

வவுனியா வைத்தியசாலையில் அண்மையில் இடம் பெற்ற வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளரின் ஊடக சந்திப்பின் போது வவுனியாவில் முறைகேடான முறையில் அதாவது உரிய தகுதி பெறாத வைத்தியர்கள் சிலர் தனியார் வைத்தியசாலைகளையும், மருந்தகங்களையும் நடத்துவதாக ஊடகவியலாளர்கள் குற்றம் சாட்டிருந்தனர்.

இதனையடுத்து, வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தியின் பணிப்புக்கு அமைய வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள்திணைக்களத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து வவுனியா, நெளுக்குளம் பகுதியில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது ஆயுள்வேத வைத்தியர் ஒருவர் தனியார் வைத்தியசாலையின் பேரில் ஆங்கில மருந்துகளை விநியோகம் செய்வது கண்டு பிடிக்கப்பட்டதுடன் அங்கிருந்து பெருந்தொகையான மருந்துகளும் மீட்கப்பட்டன.

அத்துடன் சிதம்பரபுரம் பகுதியில் உள்ள ஒருவர் ஆயுள்வேத வைத்தியர் என்ற பெயரில் வைத்தியசாலை ஒன்றினை நடத்தி வந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த வைத்தியசாலையில் இருந்த ஆயுள்வேத மற்றும் ஆங்கில மருந்துகள் மீட்கப்பட்டுள்ளதுடன் குறித்த நபர் ஆயுள்வேத வைத்தியர் இல்லை என்பதும் தெரியவந்துள்ளது.

குறித்த தனியார் வைத்தியசாலைகளை நடத்திய உரிமையாளர்கள் இருவரையும் விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதுடன், குறித்த இரு நிலையங்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சுகாதார சேவைகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (4-6-250)

### கடும் வறட்சியால்

# மடு பிரதேச செயலக பிரிவில் 3,244 நபர்கள் பாதிப்பு

(மன்னார்)

கடும் வறட்சியால் மன்னார் மாவட்டத்தில் மடு பிரதேச செயலகப் பிரிவில் மாத்திரம் 3,244 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தகவல் வழங்கியுள்ளது.

தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக பொதுமக்கள் உட்பட கால்நடைகள் பாதிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக மன்னார் மாவட்டத்தின் சில இடங்களில் குடிநீருக்கான தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

அதிலும் மடு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள மல்லவராஜர் கட்டையடம்புன்,மாதா கிராமம், பெரிய முறிப்பு, இரணை இலுப்பகுளம்,கீரிசுட்டான் போன்ற பகுதிகள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

குறித்த கிராமங்களை சேர்ந்த 952 குடும்பங்களை சேர்ந்த 3244 நபர்கள் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைப்பிரிவு தகவல் வழங்கியுள்ளது. இந்த நிலையில் இவ்வறட்சியான காலநிலை தொடரும் பட்சத்தில் பாதிக்கப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரிக்கலாம் என் எச்சரிக்கப்பட்டுள்ளது. (நி-285)

# கடும் வறட்சி காரணமாக மஞ்சள் நிறமாக மாறும் கிணற்று நீர்

## தூய குடிநீரைப் பெறுவதில் கடும் நெருக்கடி

(அக்கராயன்)

முல்லைத்தீவு கரைதுறைபற்றின் மாத்தளன், அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம் ஆகிய கிராமங்களில் குடிநீர் கிணறுகள் கூடுதலாக மஞ்சள் நிறமாக மாறி உள்ளதன் காரணமாக குடிநீருக்கான நெருக்கடியினை இக்கிராமங்களின் மக்கள் எதிர்கொண்டுள்ளனர்.

இப்பிரதேசத்தில் 480 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற நிலையில் தூய குடிநீரினைப் பெற்றுக் கொள்வதில் நெருக்கடி காணப்படுகின்றது. இரு ஆண்டுகளுக்கு முன்னர் அம்பலவன்பொக்கணையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் ஒன்று செயற்படத்தொடங்கி உள்ள நிலையில் குறித்த இடத்திற்கே கூடுதலான மக்கள் குடிநீருக்கு செல்லவேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

எதிர்காலத்தில் மேற்படி கிராமங்களுக்கு குடிநீரினை இலகுவாக மக்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலைமையினை அதிகாரிகள் உருவாக்க வேண்டும் என அக்கிராம மக்கள் தெரிவித்தனர். தற்போது நிலவுகின்ற கடும் வறட்சியான சூழலிலும் நீண்ட தூரம் இக்கிராமங்களின் மக்கள் குடிநீருக்கு செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. (நி-350)

# மது விற்பனை நிலையத்தை இடமாற்ற நடவடிக்கை எடுங்கள்

### பொதுமக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயனில் உணவுடன் கூடிய மது விற்பனை நிலையத்தினை இடம் மாற்றுவதில் மாவட்டத்தின் உயரதிகாரிகள் உரிய நடவடிக்கைகள் எடுக்கவில்லை என எதிர்ப்பில் ஈடுபட்டுள்ள மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் 2022 ஆம் ஆண்டு உணவகத்துக்கு மட்டும் பிரதேச சபையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தகவல் அறியும் சட்ட மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இம் மது விற்பனை நிலையம் அமைந்துள்ள கட்டடங்கள் அமைப்பதற்கான அனுமதிகளும் பிரதேச சபையினால் வழங்கப்படவில்லை. கரைச்சி பிரதேச செயலாளரின் எந்தவிதமான அனுமதிகளும் இம் மது விற்பனை நிலையத்திற்கு வழங்கப்படவில்லை. இதுவும் தகவல் அறியும் சட்டம் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் கரைச்சி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இவ்விடயங்கள் ஆராயப்பட்ட போதிலும் இதுவரை குறித்த மது விற்பனை நிலையம் இடம் மாற்றப்படவில்லை. மாவட்டத்தின் உயரதிகாரிகள் உரிய நடவடிக்கைகள் விரைவாக எடுக்காததன் காரணமாகவே தற்போதும் குறித்த மது விற்பனை நிலையம் இயங்கி வருகின்றது.

இதனை இடம் மாற்றுவதற்கு உயரதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தனர். (4-6-350)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 200 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 400 | 400 | 400 |
| தக்காளி | 200 | 160 | 150 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| கோவா | 250 | 250 | 250 | 250 |
| கரட் | 350 | 480 | 450 | 450 |
| பூசணி | 80 | 120 | 100 | 80 |
| புடோல் | 80 | 80 | 100 | 150 |
| வாழைக்காய் | 150 | 240 | 200 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 190 | 200 | 200 |
| பாகற்காய் | 350 | 400 | 400 | 300 |
| வெண்டக்காய் | 100 | 100 | 80 | 250 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 160 | 200 |
| பயற்றங்காய் | 250 | 200 | 150 | 150 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 200 |
| பீற்றூட் | 150 | 80 | 150 | 140 |
| கறிமிளகாய் | 300 | 250 | 250 | 250 |
| முருங்கைக்காய் | 250 | 350 | 350 | 250 |
| போஞ்சி | 350 | 450 | 550 | 450 |
| கத்தரிதம்புள்ள | 100 | 150 | 160 | 160 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 70 | 100 |
| தேசிக்காய் | 450 | 450 | 600 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 400 | 400 | 300 |
| வெங்காயப்பூ | 200 | 300 | 250 | 400 |
| முள்ளங்கி | 80 | 80 | 120 | 150 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 160 | 50 | 60 |
| ஈரப்பலா | 80 | 80 | 100 | 120 |

# பகிரங்க ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகள், உழவியந்திரப் பெட்டி, முச்சக்கர வண்டி மற்றும் இதரபொருட்கள் என்பன நீதிமன்ற வளாகத்தில் வைத்து நாளையதினம் காலை 9 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

குறித்த ஏலத்தில் கொடுப்பனவுகளை பணமாகவே செலுத்த வேண்டும்.

காசோலை ஏற்றுக் கொள்ளப்படமாட்டது. தமது தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளிக்க வேண்டும்.

அத்துடன் ஏலவிற்பனையில் பெற்றுக்கொள்ளும் பொருட்களை அன்றையதினமே உடனடியாக வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும் என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு வழங்கும்

# மூலிகை அழகுசாதனப் பொருட்கள்

தொடர்ச்சி...

### சருமப் பராமரிப்பு

சருமப் பராமரிப்பில் மூலிகை அழகுசாதனப் பொருட்கள் சருமத்தைத் தூய்மையாக வைத்திருப்பதற்கும் போசாக்களிப்பதற்கும் ஈரத்தன்மையைப் பேணுவதற்கும் உபயோகிக் கப்படுகின்றன. வறண்ட சருமத்திற்கு கஸ்ரோ எண்ணெய், கொக்கோ பட்டர், தேங்காய் எண்ணெய் போன்றவை பாவிக்கப்படுகின்றன.

பருக்கள், புள்ளிகள், acne சிகிச்சை போன்றவற்றிற்கு துளசி, பட்டாணி, பூசணி,வெங்காயம் போன்றவற்றிலிருந்து பெறப்படும் அழகுசாதனப் பொருட்கள் பாவிக் கப்படுகின்றன. சருமம் மூப்படைதலைத் தடுத்தல், UVகதிர் வீசலால் வரும் தாக்கத்தினைக் குறைத்தல் என்பவற்றிற்கு Panax gin seng,Green tea (Camelliasinensis) வெந்தயம் போன்றவற்றிலிருந்து பெறப்படும் அழகுசாதனப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

### தலைமுடி பராமரிப்பு

சில வகையான மூலிகை, அழகு சாதனப் பொருட்கள் தலைமுடி வளர்வதை ஊக்குவிக்கின்றன. மீண்டும் புதிதாகத் தலைமுடி வளர்வதை ஊக்குவிக்கின்றன. அத்துடன் தலைமுடியின் தன்மையை மேம்படுத்தவும் உதவுகின்றன. Gin kgo biloba, Salvia officina lis, Rosema rinus officinalis போன்ற தாவரங் களில் இருந்து எடுக்கப்படும் அழகுசாதனப் பொருட்கள் இதற்கு உபயோகிக்கப்படுகின்றன.


### பொடுகுக்கான சிகிச்சை

பொடுகைக் கட்டுப்படுத்தவும் முடி உதிர்வைத் தடுக்கவும் மூலிகை அழகுசாதனப் பொருட்கள் பயன்படுகின்றன. உள்ளி (Allium sati vum), வால்நற் (Juglan) போன்ற வற்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் அழகு சாதனப் பொருட்கள் உபயோகிக்கப்படுகின்றன.

### தலைமுடி நிறமூட்டல்

இவ்வகையான மூலிகை அழகு சாதனப் பொருட்கள் சாயமூட்டுகின்ற காரணியாகப் பயன்படுத் தப்படுகின்றது. அதாவது தலை முடியை நிறமூட்டுவதற்குப் பயன் படுகின்றன.

அத்துடன் தலைமுடியிலுள்ள மாசுக்களை நீக்குவதற்கும் உதவுகின்றது. இதற்காக Law soniain ermis(Henna), Hibiscus போன்ற தாவரங்கள் பயன்படுகின்றன.



### நகப் பராமரிப்பு

பங்கசு தொற்று என்பது பொதுவாக நகங்களில் ஏற்படுகின்றது. இப்பங்கசுவை நீக்கவும் நகங்களை அழகாக்கவும் பொலிவானதாக்கவும் சில மூலிகை அழகுசாதனங்கள் உபயோகிக் கப்படுகின்றன. Lemon grass மற்றும் Pimpinella asisum எனும் தாவரத்திலிருந்து கிடைக்கப் பெறும் அழகுசாதனப் பொருட்கள் இதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

### கண் பராமரிப்பு

கண்ணைச் சுற்றியுள்ள சருமத்தை மேம்படுத்தல், கரு வளையம் உருவாதலைக் குறைத்தல் என்ப வற்றிற்குப் பயன்படுத் தப்படுகின்றன. இதற்குக் கற்றாழை, ரோஸ்மெரி (Rose marinus officinalis), green tea போன்ற தாவரங்கள் பயன் படுகின்றன.

### உதடு பராமரிப்பு

அதிக குளிர் மற்றும் வெப்ப காலங்களில் உதடுகள் வறண்டு போதல் மற்றும் உதடுகளில் வெடிப்புகள் என்பன ஏற்படுகின்றன.

எனவே இதிலிருந்து உதட்டினை பாதுகாத்து உதட்டினை ஈரலிப்பாக வைத்திருக்கவும் மற்றும் உதட்டில் ஏற்படும் அரிப்பு என்பவற்றைத் தடுக்கவும் Calendula officinalis, Lava ndulaangustifolia போன்ற தாவரங்கள் பயன்படுகின்றன.

### மூலிகை, அழகுசாதனப் பொருட்களின் நன்மைகள்

1. இயற்கையாகக் கிடைக்கக் கூடிய தாவரங்களிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது.
2. இவற்றின் உபயோகம் உடலிற்கு நன்மை பயக்கக் கூடியது.
3. எல்லா விதமான சருமத்திற்கும் ஒத்துப் போகக் கூடியதாக வுள்ளது. இதனால் இம்மூலிகை அழகு சாதனப்பொருட்கள் உபயோகிப்பது சுலபமானது.
4. செயற்கை இரசாயனங்களிலிருந்து விடுபட்டு இருப்பதனால் எந்தப் பக்கவிளைவுகளும் அற்றது.

### மூலிகை அழகுசாதனப் பொருட்களுக்கான அதிகரித்த கேள்வி (High demand)

1. தற்போது செயற்கை இரசாயன மற்ற இயற்கையான பொருட்களிற்கு மக்களிடையே கேள்வி அதிகரிக்கின்றது.
2. சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தாத, சூழலில் நிலைத்திருக்கக் கூடிய பொருட்கள் மக்களால் அதிகளவில் விரும்பப்படுகின்றன.
3. சமூக ஊடகங்களிலும் அழகு நிலையங்களிலும் இயற்கை மூலிகைப் பொருட்களிற்கான முக்கியத்துவம் அதிகரித்துக் காணப்படுகின்றன.
4. இம்மூலிகை அழகுசாதனப் பொருட்கள் பலவிதமான சருமங்க ளுக்கும் பொருத்தமானது. மேலும் வெவ்வேறு வகையான மூலிகை களிலிருந்தும் பெறக் கூடியதாக உள்ளதால் இவற்றை இலகுவில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பதோடு இலகுவில் உபயோகிக்கக் கூடியதாகவும்உள்ளது.
5. இவ்அழகுசாதனப் பொருட்களின் வலையமைப்பு வேகமாக முன்னேறி வருவதால் இப்பொருட்களை இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது. ஆரம்பகாலத்தில்வீட்டுப் பாவனைக்கு உபயோகிக்கப்பட்ட இம்மூலிகை அழகுசாதனப் பொருட்கள் தற்போது வியாபாரத் துறையில் விரிந்து பரந்து வளர்ச்சியடைந்துள்ளது.

அத்துடன் இம்மூலிகை அழகு சாதனங்களில் பக்க விளைவுகள் இன்மையால் இவற்றிற்கு சந்தைப்படுத்தலில் அதிகரித்த கேள்வி உண்டு. மேலும் தாவரங்களில் உள்ள உயிர்த் தொழிற்பாட்டு உள்ளீடுகள் சருமத்தின் மேம்படுத்தலுக்கும் அதற்குத் தேவையான ஊட்டச் சத்துக்களையும் அளிக்கின்றது.

தற்போது ஆரோக்கியமான சருமத்தைப் பெறுவதில் நம் அனைவருக்கும் உள்ள ஆர்வமானது இம்மூலிகை அழகுசாதனப் பொருட்களிற்கான வாய்ப்பை அதிசயிக்கத்தக்களவில் எதிர்காலத்தில் உண்டு பண்ணும். எனவே இவ் அபரிமிதமான வளர்ச்சியினால் நாம் தொழில் முயற்சியில் ஈடுபட்டு அதிகளவிலான வருமானத்தை இத்துறையில் ஈட்டிக் கொள்ளலாம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

(முற்றும்)

ஆக்கம்:-
செல்வி. கோலமுகி வேதநாயகன். கலாநிதி (திருமதி) கௌரி ராஜ்குமார்,
தாவரவியற்துறை,
விஞ்ஞானபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 265





அதோ அவள் சற்றுத் தயங்கி நிற்கிறாள். நேரே கடலே நோக்கி ஓடாமல் வலதுபக்கமாகத் திரும்பி ஓடுகிறாள்! தன்னிடம் பிடிபடாமல் இருப்பதற்காக வலதுபுறத்தில் சற்றுத் தூரத்தில் தென்பட்ட காட்டை நோக்கி ஓடுகிறாள். காட்டுக்குள் அவள் புகுந்துவிட்டால் நிச்சயமாகப் பிடிக்க முடியாது தான்! இத்தனை நேரம் ஓடியதும் வீண்! வந்தியத்தேவனுடைய கால்களும் அச்சமயம் கெஞ்ச ஆரம்பித்து விட்டது.

மீண்டும் அவளுடைய மனத்தை மாற்றிக் கொண்டு விட்டாள் போலும்! காட்டுக்குள் போகும் எண்ணத்தை விட்டு விட்டாள் போலும்! பம்பரத்தைப் போல் ஒரு சுற்றுச்சுற்றித் திரும்பி ஓடி வருகிறாள். கலங்கரை விளக்கின் அடிக்குப் போக நினைத்தாள் போலும். ஒரு நாலு பாய்ச்சல் பாய்ந்தால் அவளைப் பிடித்து விடலாம். கைப்பிடியாக அவளைப் பிடித்து "பெண்ணே! ஏன் இப்படி என்னைக் கண்டு மிரண்டு ஓடுகிறாய்? உனக்கு உன் காதலனிடமிருந்து செய்தி கொண்டு வந்திருக்கிறேன்!" என்று சொன்னால், எத்தனை அதிசயம் அடைவாள்! சேந்தன் அமுதன் அவனிடம் ஒன்றும் சொல்லி அனுப்பவில்லை என்பது உண்மைதான். அதனால் என்ன? ஏதாவது சொந்தமாகக் கற்பனை செய்து சொன்னால் போகிறது!

வந்தியத்தேவன் மனத்திற்குள் தீர்மானித்தபடி தன் தேகத்தில் மிச்சமிருந்த வலிமையையெல்லாம் உபயோகித்துப் பாய்ந்து ஓடினான். திரும்பி ஓடிவந்து கொண்டிருந்த அவளை நாலே பாய்ச்சலில் பிடித்துவிடலாம் என்பது தான் அவனுடைய உத்தேசம். திடீரென்று "ஐயோ!" என்றான். தனக்கு என்ன நேர்ந்து விட்டது என்பது முதலில் அவனுக்கே தெரியவில்லை. பிறகு புலப்படத் தொடங்கியது. அவனுடைய கால்கள் இரண்டும் சேற்றில் புதைந்து கொண்டிருந்தன. முதலில் பாதங்கள் மட்டும் புதைந்தன. பிறகு கணுக்கால் புதைந்தது, முழங்கால் வரையில் சேறு மேலேறி விட்டது!

அடடா! இந்த இடம் நம்மை எப்படி ஏமாற்றி விட்டது? மேலே பார்த்தால் நன்றாய்க் காய்ந்து பொறுக்குத் தட்டியிருக்கிறது. உள்ளே சேறு இன்னும் காயவில்லை. என்றுமே முழுமையும் காய முடியாத புதை சேற்றுக் குழிகளைப் பற்றி வந்தியத்தேவன் கேள்விப்பட்டதுண்டு. ஆடு மாடுகள், குதிரைகள், யானைகள் கூட அப்பள்ளங்களில் அகப்பட்டுக் கொண்டால் சிறிது சிறிதாக உள்ளே அமுங்கிக் கொண்டே போய்க் கடைசியில் முழுதுமே முழுகி மறைந்து விடுமாம்! அத்தகைய புதைகுழிதானோ இது? அப்படித் தான் தோன்றுகிறது. முழங்காலும் மறைந்து விட்டதே! மேலும் உள்ளே இறங்கிக் கொண்டேயிருப்போமோ? விரைவில் தொடை வரைக்கும் புதைந்து விடும் போலிருக்கிறதே! யானைகளையும் குதிரைகளையும் விழுங்கி ஏப்பம் விடும் புதை சேறு நம்மைச் சும்மா விட்டு விடுமா! ஐயோ! இதுவா நமது முடிவு? நாம் கண்ட எத்தனை எத்தனையோ பகற்கனவுகள் எல்லாம் இதிலேயே புதைந்து விட வேண்டியதுதானா? இந்த அபாய வேளையில் அந்த விசித்திரமான பெண் வந்து கை கொடுத்துக் காப்பாற்றினால்தான் உண்டு. தப்புவதற்கு வேறு வழியில்லை. ஒரு பெருங்கூச்சல் போட்டுப் பார்க்கலாம். இவ்விதம் எண்ணிய வந்தியதேவன், "ஐயோ! நான் செத்தேன்! சேற்றில் முழுகிச் சாகிறேன். எனக்குக் கைகொடுத்து உதவி செய்து காப்பாற்றுவார் யாரும் இல்லையா?" என்று கத்தினான்.

அந்தக் கூக்குரல் பூங்குழலியின் காதில் விழுந்தது. அவனுக்கு நேர் எதிரே சற்றுத் தூரத்தில் ஓடிக் கொண்டிருந்த பூங்குழலி நின்றாள். ஒரு கணம் தயங்கினாள். வந்தியத்தேவனுடைய அபாயமான நிலையைப் பார்த்துத் தெரிந்து கொண்டாள்.

மறுகணம் அங்கே பாதி மணலிலும் பாதி சேற்றுக் குழியிலும் கிடந்த படகு ஒன்று அவள் கவனத்தைக் கவர்ந்தது. அக்குழியில் தண்ணீர் நிறைந்து ஆழமான நீரோடையாக இருந்த காலத்தில் அப்படகு உபயோகப் பட்டிருக்க வேண்டும். அதில் இப்போது லாகவமாகக் குதித்து ஏறினாள். துடுப்பை எடுத்து இரண்டு தடவை வலித்தாள். அடடா! இது என்ன அதிசயம்? அந்தப் படகு நீரில் அன்னப்பறவை செல்வது போல் அல்லவா சேற்றின் மேலே விரைவாக மிதந்து செல்கிறது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## தாய்மையின் சக்தி



ஒரு மலைப் பிரதேசத்தில் மலை உச்சியில் ஓர் இனத்தாரும், அடிவாரத்தில் இன்னொரு இனத்தாரும் வாழ்ந்து வந்தார்கள். இரு இனத்தாருக்கும் எப்போதும் பகை.

ஒரு முறை உயரத்தில் இருந்தவர்கள் அடிவாரத்தைச் சேர்ந்த ஒரு குழந்தையைக் கடத்தி விட்டார்கள்.

சமூகத்திலிருந்த சில பெரியவர்கள், மலைமேல் இருந்த சமூகத்தினரிடம் சமாதானமாகப் போய் பேசினால் குழந்தையை மீட்டு வந்து விட சாத்தியம் இருப்பதாக ஊரில் உள்ள இளைஞர்களிடம் அறிவுரை கூறினர்.

இளைஞர்கள் சிலர் உடனே முன்வந்தார்கள். அவர்கள் கடினமான வேலைகள் செய்து பழகியவர்கள். எந்தச் செயலை எடுத்தாலும் அதை விடாமுயற்சியுடன் முடிக்கும் மனப்போக்கைக் கொண்டவர்கள்.

ஊர்ப் பெரியவர்களும், இந்தச் செயலை முடிக்க இவர்கள்தான் சிறந்தவர்கள் என்று அவர்களை வாழ்த்தி அனுப்பி வைத்தார்கள்.

இளைஞர்களும் ஆர்வத்துடன் கிளம்பினார்கள். அந்த மலையின் சில பகுதிகள் மிகவும் செங்குத்தானவை.

அந்த இளைஞர்களால் அப்படி ஒரு பகுதியை ஏறிக் கடக்க முடியவில்லை.

விடாமுயற்சியுடன் அப் பகுதியைக் கடக்க பலமணி நேரமாக பல வழிகளில் முயன்று கொண்டிருந்தனர். களைத்துப் போனதால் ஓய்வெடுத்துக் கொண்டு மீண்டும் முயற்சித்தனர்.

அப்போது தம் ஊரைச் சேர்ந்த ஒரு பெண் மேலேயிருந்து கடத்தப்பட்ட குழந்தையைத் தூக்கிக் கொண்டு கீழே இறங்கி வருவதைப் பார்த்தார்கள்.

அவள் அருகில் வந்தவுடன் "நாங்கள் ஏற சிரமப்பட்ட மலையை நீ ஏறிச் சென்றுவிட்டாயே! எப்படி?" என்று வியப்புடன் கேட்டார்கள்.

அவள் இடுப்பிலிருந்த குழந்தையைக் காட்டி "இது உங்கள் குழந்தை இல்லை. என் குழந்தை. அது தான் வித்தியாசம்" என்று பதில் சொன்னாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயவர்கள் முட்டாள்களின் நாட்டில் பட்டினியாய் இருப்பதில்லை.

*– சர்ச்சில்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அவர்கள் சந்திரயானைப் பார்க்கிறார்கள் இவர்கள் குருந்தூர் பொங்கலைப் பார்க்கிறார்கள்

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் என்ன வித்தியாசம் என்றொரு கேள்வியைக் கேட்டால், நிச்சயம் நீங்கள் கடுப்பாவீர்கள்.

ஏனெனில் ஒப்பிடுகைக்கு ஓர் அளவுப் பரிமாணம் இல்லையா? இலங்கையையும் இந்தியாவையும் ஒப்பிடுவது எந்தவகையில் நியாயம் என்ற உங்களின் ஆதங்கம் ஏற்புடையதே.

இருந்தும் இந்தியா சந்திராயன் – 3 ஐ சந்திரனில் தரையிறக்கியிருக்கும்போது, இலங்கை ஓர் ஊசியையேனும் இங்கேயே உற்பத்தி செய்திருக்க வேண்டுமல்லவா?

ஆனால் ஓர் ஊசி கூட இங்கு உற்பத்தியாகவில்லை என்பதுதான் அபத்தம்.

சரி, இந்தியாவுடன் ஒப்பிடுகையில் இலங்கை மிகச் சிறிய நாடு. அதாவது இந்திய மாநிலங்களின் அளவில் கூட இலங்கை சிறியதெனும் போது, அதன் சனத்தொகை பற்றி நாம் கூற வேண்டியதில்லை.

ஆனாலும் அண்டை நாடான இந்தியாவைப் பார்த்தேனும் உற்பத்தி முயற்சிகள், கைத்தொழில் விருத்திகள் என இலங்கை தன்னை வளப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் அது எதுவும் நடக்கவில்லை.

மாறாக, பேரினவாதப் பௌத்த பிக்குகள் துறவிகள் என்ற பேரில் இந்த நாட்டை நாசம் செய்துவிட்டனர்.

ஆம், இலங்கை பௌத்த சிங்கள நாடு என்ற அடிமைத்தனத்தோடு ஆட்சிப்பீடம் பௌத்த மகா சங்கத்தை விழுந்து வணங்க, அவர்கள் பௌத்தத்தை வளர்ப்பதுதான் இந்த நாட்டின் கடமை என்பதுபோல நிலைமையை ஆக்கி விட்டனர்.

இதன் காரணமாக இலங்கை பொருளாதார நெருக்கடிக்குள் வீழ்ந்து கிடக்கிறது. உலக நாடுகளிடம் பிச்சை எடுக்கிறது.

எடுப்பது பிச்சை என்ற உணர்வு இம்மியும் இல்லாமல், மார்தட்டி மதவாதம் பேசுகின்ற பௌத்த பிக்குகளையும் தமிழர்களின் தலைகளை வெட்டுவேன் என்று கொலைப் பயமுறுத்தல் விடுகின்ற மேர்வின் சில்வா போன்ற காடைத்தன அரசியல்வாதிகளையும் இந்த நாடு பாதுகாத்து நிற்கிறது.

என்ன செய்வது பௌத்த பிக்குகளை அடக்கி, கௌதம புத்தபிரானின் போதனைகளைப் பின்பற்றி நடவுங்கள். இல்லையேல் காவி களையப்படும் என்று துணிந்து எச்சரிப்பதற்கு இந்த நாட்டில் ஒரு ஜனாதிபதி வராத வரை பௌத்த பிக்குகளின் கால்களைத் தொட்டு வணங்கி ஆட்சி செய்கின்ற அடிமைத்தனம் நீடிக்கவே செய்யும்.

இயற்கை அழகு மிகுந்த ஒரு சிறிய நாட்டை அமைதிப்பூங்காவாக ஆக்க முடியாமல் இனவாதமும் மதவெறியும் கொண்டு மனிதக் குருதி குடிக்கின்ற கொடுமை மிகுந்த நாடாக இலங்கைத் திருநாடு ஆகிவிட்டதே! என் செய்வோம். இந்த நிலைக்கு என்ன காரணம் என்று ஒரு கணம் சிங்களப் புத்திஜீவிகள் சிந்திப்பார்களாயின், அதன் மறுகணம் இலங்கை வனப்பு மிகுந்த நாடாக மலரும்.

ஆனால் அது நடக்குமா? என்றால் இல்லவே இல்லை.

உண்மை. 2023ஆம் ஆண்டு ஓகஸ்ட் 23 ஆம் திகதி மாலை 6 மணி 4 நிமிடமளவில் இந்தியா சந்திராயன் – 3ஐ நிலவில் தரையிறக்கம் செய்து மகிழ்ந்து கொண்டாடுகிறது.

ஆனால் இலங்கையில் 2023 ஓகஸ்ட் 18ஆம் திகதி குருந்தூர்மலையில் படையினர் சூழ்ந்து நின்று பொங்கலைப் பார்க்கிறார்கள். கூடவே பொங்கல் செய்வதா? வடை சுடுவதா? விட மாட்டோம் என பௌத்த சிங்களப் பேரினவாதம் ஆர்ப்பரிக்கிறது.

இந்த நிலைமை இருக்கும்போது இலங்கை உருப்படுமா என்ன?

# 51 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் வறட்சியான காலநிலையால் பாதிப்பு

## நட்டஈடு வழங்கத் தீர்மானம் – விவசாய அமைச்சு

(கொழும்பு)

வறட்சியான காலநிலையால் 51,035 ஏக்கர் நெற்பயிர்ச்செய்கை, 10 ஆயிரம் ஏக்கர் மரக்கறி உட்பட ஏனைய பயிர்ச்செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஒரு ஏக்கர் விவசாய நிலத்துக்கு 40 ஆயிரம் ரூபா, 1ஹெக்டயர் விவசாய நிலத்துக்கு 1 இலட்சம் என்ற அடிப்படையில் நட்டஈடு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாயத்துறை இராஜாங்க அமைச்சர் டி.பி ஹேரத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை வாய்மூல விடைக்கான வினாக்களின் போது வறட்சியான காலநிலையால்சிறுபோக பயிர்ச்செய்கைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு, விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய நட்டஈடு தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸம்பில் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலையால் 51,035 ஏக்கர் நெற்பயிர்ச் செய்கைகளுக்கும்,10 ஆயிரம் ஏக்கர் மரக்கறி உட்பட ஏனைய பயிர்ச்செய்கைகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

(புதன்கிழமை மதிப்பாய்வுக்கு அமைய) நெல், மிளகாய், சோளம், உருளைக்கிழங்கு மற்றும் சோயா ஆகிய பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கு நட்டஈடு வழங்க மதிப்பாய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய ஒரு ஏக்கர் விவசாய நிலங்களுக்கு 40 ஆயிரம் ரூபா, 1 ஹெக்டயர் விவசாய நிலங்களுக்கு 1 இலட்சம் ரூபா என்ற அடிப்படையில் நட்டஈடு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம்ஆகிய மாவட்டங்களின் விவசாய நிலங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து இதுவரை மதிப்பாய்வு தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை.

வறட்சியான காலநிலையால் குருநாகல் மாவட்டத்தில் 15,305 ஏக்கர் விவசாய நிலம், மஹவ விவசாய வலயத்தில் 9,295 ஏக்கர் விவசாய நிலம், உடவளவ விவசாய வலயத்தில் 14,667 ஏக்கர் விவசாய நிலம், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 1,892 ஏக்கர் விவசாய நிலம், புத்தளம் மாவட்டத்தில் 1,230 ஏக்கர் விவசாய நிலம் பாதிக்கப்பட்டுள்ளன என்றார்.(ம-7)

## பண்டாரவளையில் பெண் படுகொலை

(கொழும்பு)

பண்டாரவளை நகரில் உள்ள ஹோட்டல் ஒன்றில் பெண்ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

எடம்பிட்டியவை சேர்ந்த 40 வயதான பெண் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ குறிப்பிட்டார்.

களனி–கோணவலயை சேர்ந்த 50 வயதான ஒருவர் நேற்று முன்தினம் ஹோட்டலுக்கு வருகை தந்துள்ளதுடன் ,குறித்த பெண்ணை ஹோட்டலுக்கு அழைத்துள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

அந்நபர் அவசரமாக ஹோட்டலில் இருந்து வெளியேறியதால், அங்கு பணிபுரிந்த ஊழியர்கள் இருவரும் தங்கியிருந்த அறையை சோதனையிட்ட போதே பெண் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த பெண் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுள்ளதுடன், நஞ்சு அருந்தியுள்ளமையும் தெரியவந்துள்ளது.

தலைமறைவாகியுள்ள சந்தேகநபரால் எழுதப்பட்ட கடிதமொன்றும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது. (ம-7)

## மருத்துவ ஆலோசனை முகாம்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் காலைக் கதிரவன் லயன்ஸ் கழகமும் யாழ்ப்பாண லயன்ஸ் கழகமும் இணைந்து நடாத்தும் குழந்தை இன்மை (கருவுறாமை) தொடர்பிலான விழிப்புணர்வு மற்றும் இலவச ஆலோசனை முகாமானது நாளை மற்றும் நாளை மறுதினம் காலை 9.00 மணி முதல் பி.ப 3.00 மணிவரை எண் 59,சென் பற்றிக்ஸ் வீதி எனும் முகவரியில் அமைந்துள்ள லொயலாஸ் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம-7)

## ராஜா, பாரதி பாஸ்கர் பங்குபற்றும் சிறப்பு பட்டிமன்றம் இன்று யாழில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்தியாவின் பட்டிமன்றப் பேச்சாளர்கள் மற்றும் உள்ளூர்ப் பட்டிமன்றப் பேச்சாளர்கள் இணைந்து பங்குகொள்ளும் சிறப்புப் பட்டிமன்றம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

நவீன தொழில்நுட்பங்களின் வரவு வரமே! வரமல்ல! எனும் தலைப்பில் இடம்பெறவுள்ள இப்பட்டிமன்றத்தின் நடுவராக எஸ்.ராஜா செயற்படவுள்ளார்.

மேலும் வரமே எனும் தரப்பில் திருமதி.பாரதி பாஸ்கர், ச.லலிசன், நடராஜன் மற்றும் ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீ வாதிடவுள்ளனர்.

வரமல்ல எனும் தரப்பில் பேராசிரியர் ஸ்ரீ.பிரசாந்தன், ந.விஜயசுந்தரம், செல்வி.இ.ஹார்த்தியாயினி மற்றும் ஐ.யோகநாதன் ஆகியோர் வாதிடவுள்ளனர். (4-6)

## மோ.சைக்கிள் விபத்து ஆசிரியர் உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை - புனாணை பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளம் ஆசிரியர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,ஓட்டமாவடி நோக்கி தனது நண்பருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது எதிரே வந்த பஸ்வண்டியில்மோதியதில் மரண மடைந்துள்ளார்.

அண்மையில் ஆங்கிலப் பாட ஆசிரியர் நியமனம் பெற்ற 25 வயதுடைய ஓட்டமாவடி - 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த எஸ்.எச்.எம்.அஸாம் என்பவரே மரணமடைந்துள்ளார்.

இவ் விபத்தில் பலத்த காயமடைந்த மற்றையவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந் நிலையில் மரணமடைந்த இளம் ஆசிரியரின் உடல் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை வவுனியா பிரதேசத்தில்** அவறந்துலாவா, நவகம மானே, பாவற்குளம், பழையனூர், இராஜேந்திரகுளம், சூடுவெந்தபுலவு கோபுரம், சூடுவெந்தபுலவு, ட்ராக் 07-பாவற்குளம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் சீன துறைமுகம், கள்ளிக்கட்டைக்காடு, முள்ளிப்பள்ளம், நொச்சிகுளம், சிறுநாவற்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## சிறுதானியங்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். விஞ்ஞான சங்கத்தின் மருத்துவ விஞ்ஞான பிரிவின் ஒருங்கமைப்பில் ஆரோக்கியத்தில் சிறு தானியங்கள்- ஓர் விழிப்புணர்வு நிகழ்வும் இலவச குரக்கன் கூழ் விநியோகமும் நாளை மறுதினம் 27 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு நல்லூர் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு

15



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

பணவீக்கத்தினால் பல தீமைகள் ஏற்படுகின்றன. இதனால் பல நாடுகளின் பொருளாதாரம் சீர்குலைந்தது.

உதாரணமாக 1923இல் ஜேர்மனிய நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்தது. எனவே ஒவ்வொரு அரசும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். யூன் 2022 இலங்கையில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2022 யூன் மாதப் பணவீக்கம் 54.6% ஆகக் காணப்பட்டது. இதனை படம்-1 காட்டுகிறது.

இலங்கையின் 1960 தொடக்கம் 2020 வரையான காலப்பகுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் பணவீக்கத்தினை அட்டவணை -1 காட்டுகிறது. அமெரிக்காவின் 1960 தொடக்கம் 2020 வரையான காலப்பகுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் பணவீக்கத்தினை அட்டவணை - 2 காட்டுகிறது. தெற்காசிய நாடுகளில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2022ம் ஆண்டு பெப்ரவரி மாதப் பணவீக்கம் படம்-2 இல் காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் (ஆண்டிற்கு ஆண்டு) பணவீக்கம் 1960-2020 அட்டவணை-1

| ஆண்டு | பண வீக்கம் | ஆண்டு | பண வீக்கம் | ஆண்டு | பண வீக்கம் | ஆண்டு | பண வீக்கம் | ஆண்டு | பண வீக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1960 | -1.54% | 1973 | 9.63% | 1986 | 7.98% | 1999 | 4.69% | 2012 | 7.54% |
| 1961 | 1.13% | 1974 | 12.30% | 1987 | 7.72% | 2000 | 6.18% | 2013 | 6.91% |
| 1962 | 1.50% | 1975 | 6.63% | 1988 | 13.99% | 2001 | 14.16% | 2014 | 3.18% |
| 1963 | 2.27% | 1976 | 1.33% | 1989 | 11.57% | 2002 | 9.55% | 2015 | 3.77% |
| 1964 | 3.20% | 1977 | 1.22% | 1990 | 21.50% | 2003 | 6.31% | 2016 | 3.96% |
| 1965 | 0.22% | 1978 | 12.14% | 1991 | 12.19% | 2004 | 7.58% | 2017 | 7.70% |
| 1966 | -0.16% | 1979 | 10.73% | 1992 | 11.38% | 2005 | 11.64% | 2018 | 2.14% |
| 1967 | 2.19% | 1980 | 26.15% | 1993 | 11.75% | 2006 | 10.02% | 2019 | 3.53% |
| 1968 | 5.86% | 1981 | 17.97% | 1994 | 8.45% | 2007 | 15.84% | 2020 | 6.15% |
| 1969 | 7.46% | 1982 | 10.83% | 1995 | 7.67% | 2008 | 22.56% | 2021 | 7.01% |
| 1970 | 5.87% | 1983 | 13.96% | 1996 | 15.94% | 2009 | 3.46% | | |
| 1971 | 2.67% | 1984 | 16.64% | 1997 | 9.57% | 2010 | 6.22% | | |
| 1972 | 6.35% | 1985 | 1.48% | 1998 | 9.36% | 2011 | 6.72% | | |

இலங்கையில் 1960 ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரையான ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் பணவீக்கத்தைப் பார்க்கும் போது 1960ஆம் ஆண்டில் மிகக் குறைந்த பணவீக்கம் (-1.53%) இருந்தது. அது பின்னர் ஆண்டிற்கு ஆண்டு நேர் பெறுமானத்தில் அதிகரித்துச் சென்று மீண்டும் 1966இல் குறைந்தது (-0.16%). அதன் பின் சிறிமாவோ ஆட்சிக் காலத்தில் பொருட்களுக்கு மிகவும் தட்டுப்பாடு நிலவியபோதும் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் பணவீக்கம் சில ஆண்டுகள் மிகக் குறைவாகவே காணப்பட்டது.

உதாரணமாக 1971 இல் 2.67% மாகவும் 1976இல் 1.33% ஆகவும் காணப்பட்டது. 1974இல் 12.30 சதவீதமாக உச்சநிலை காணப்பட்டது. 1971ல் JVPயின் கலவரம் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

சிறிமாவோ ஆட்சிக்காலத்தில் உள்நாட்டு சுய தொழில்கள் பாதுகாக்கப்பட்டன. இதனால் உள்நாட்டில் விவசாயிகள், நெசவாளர்கள், கைவினைக் கலைஞர்கள் என அனைவரும் பணம் சம்பாதித்தனர். விசேடமாக யாழ்ப்பாண விவசாயிகளுக்கு அது ஒரு பொற்காலமாகும்.




அதன்பின் சில ஆண்டுகள் கூடியும் (2008இல் உச்சம் - 22.56%) சில ஆண்டுகள் குறைந்தும் (1985ல் 1.48%, 2018இல் 2.14%) காணப்பட்டதோடு யூன் 2022இல் அதி உச்சமாக 54.6% வீதத்தை அடைந்தது. இவற்றை நீங்கள் தரப்பட்ட வரைபுகளிலும் அட்டவணையிலும் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

### இலங்கையில் பணவீக்க விகிதங்களின் வளர்ச்சி

முன்னர் கூறியதுபோல் இலங்கையில் நுகர்வோர் விலைகளுக்கான பணவீக்க விகிதம் கடந்த 60 ஆண்டுகளில் -1.5% மற்றும் 26.1% இடையே இருந்ததை கண்டோம். அத்துடன் 2020 இல், பணவீக்க விகிதம் 6.2% ஆக கணக்கிடப்பட்டது. 1960 முதல் 2020 வரையிலான அவதானிப்புக் காலத்தில், சராசரி பணவீக்க விகிதம் ஆண்டுக்கு 8.3% ஆக இருந்தது. ஒட்டுமொத்த விலை உயர்வு 10, 826.47% ஆகும். இதன் பிரகாரம் 1960 இல் 100 ரூபாய் விலையில் இருந்த ஒரு பொருளுக்கு 2021ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 10,926.47 ரூபாய் செலுத்த வேண்டி இருந்தது.


• பண வீக்கத்தைக் கட்டுப்டுத்த கீழ்க்கண்ட முறைகளைப் பின்பற்றலாம்.

1. வரி விதிப்பு (விகிதத்தை) அதிகப்படுத்தலாம்.
2. மூலதன திட்டங்களின் (Project) மீதான அரசு செலவை குறைத்தல்
3. இறக்குமதியில் கட்டுப்பாடுகள் விதித்தல்.
4. பங்கீடு
5. விலைக் கட்டுப்பாடு

• பணவீக்கத்தினால் ஏற்படும் பொருளாதாரத்தின் மீதான பாதிப்புகளால் நேர்மறை மற்றும் எதிர்மறையான விளைவுகள் காணப்படுகின்றன.

அமெரிக்காவின் (ஆண்டிற்கு ஆண்டு) பணவீக்கம் 1960-2020 அட்டவணை-2

| ஆண்டு | பண வீக்கம் | ஆண்டு | பண வீக்கம் | ஆண்டு | பண வீக்கம் | ஆண்டு | பண வீக்கம் | ஆண்டு | பண வீக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1960 | 1.46% | 1973 | 6.18% | 1986 | 1.90% | 1999 | 2.19% | 2012 | 2.07% |
| 1961 | 1.07% | 1974 | 11.05% | 1987 | 3.66% | 2000 | 3.38% | 2013 | 1.46% |
| 1962 | 1.20% | 1975 | 9.14% | 1988 | 4.08% | 2001 | 2.83% | 2014 | 1.62% |
| 1963 | 1.24% | 1976 | 5.74% | 1989 | 4.83% | 2002 | 1.59% | 2015 | 0.12% |
| 1964 | 1.28% | 1977 | 6.50% | 1990 | 5.40% | 2003 | 2.27% | 2016 | 1.26% |
| 1965 | 1.59% | 1978 | 7.63% | 1991 | 4.23% | 2004 | 2.68% | 2017 | 2.13% |
| 1966 | 3.02% | 1979 | 11.25% | 1992 | 3.03% | 2005 | 3.39% | 2018 | 2.44% |
| 1967 | 2.77% | 1980 | 13.55% | 1993 | 2.95% | 2006 | 3.23% | 2019 | 1.81% |
| 1968 | 4.27% | 1981 | 10.33% | 1994 | 2.61% | 2007 | 2.85% | 2020 | 1.23% |
| 1969 | 5.46% | 1982 | 6.13% | 1995 | 2.81% | 2008 | 3.84% | | |
| 1970 | 5.84% | 1983 | 3.21% | 1996 | 2.93% | 2009 | -0.36% | | |
| 1971 | 4.29% | 1984 | 4.30% | 1997 | 2.34% | 2010 | 1.64% | | |
| 1972 | 3.27% | 1985 | 3.55% | 1998 | 1.55% | 2011 | 3.16% | | |




வறுமை நிலவுதல்.
பொருள் தட்டுப்பாடு.
தொழில் வாய்ப்பு குறைதல்.
பொருட்களின் சடுதியான விலையேற்றம்.
பொருளாதாரத்தில் வீழ்ச்சி.
சேவைகள் குறைவடைதல்.
அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதிலும் பிரச்சினைகள் ஏற்படல்.

அட்டவணை-2 இல் 1960 ஆண்டு தொடக்கம் 2020ஆம் ஆண்டு வரையான அமெரிக்காவின் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் பணம் வீக்கம் தரப்பட்டுள்ளது. அதனைப் பார்க்கும் போது அமெரிக்காவில் பணவீக்கம் பெரிதாக இருந்ததாகத் தெரியவில்லை. 1980இல் மட்டும் அதிகூடிய பணவீக்கம் (13.55%) இருந்துள்ளது. அதேநேரத்தில் 2009இல் அதிகுறைந்த பணவீக்கமாக - 0.36% இருந்துள்ளது.

2020 ஆம் ஆண்டில் பணவீக்கம் 1.23% ஆகும். நாம் ஒரு பொருளை 1960ஆம் ஆண்டு ஆரம்பத்தில் 1 USD வாங்கியிருந்தால் இவ் அட்டவணையின் அடிப்படையில் 1961ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அப்பொருளின் விலை 1.0146 USD ஆகவும், 1962ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அப்பொருளின் விலை 1.0255 USD ஆகவும், 1963ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அப்பொருளின் விலை 1.0378 USD ஆகவும் இருந்திருக்கும். இவ்வாறு நோக்குமிடத்து 1970இல் அப்பொருளின் விலை 1.3320 USD ஆகவும், 1980இல் அப்பொருளின் விலை 2.8267 USD ஆகவும், 1990இல் அப்பொருளின் விலை 4.4819 USD ஆகவும், 2000இல் அப்பொருளின் விலை 5.9072 USD ஆகவும் , 2010இல் அப்பொருளின் விலை 7.4806 USD ஆகவும், 2020இல் அப்பொருளின் விலை 8.8777 USD ஆகவும் அதிகரித்திருக்கும் என்பதைக் காணலாம். அதாவது 61 வருட காலத்தில் அப்பொருளின் விலை அண்ணளவாக 9 மடங்காக அதிகரித்துள்ளது.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மோ.சைக்கிள்...

நேற்று வியாழக்கிழமை மதியம் கரணவாய் வடமேற்கு கொற்றாவத்தை கணபதி மில்லுக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் கொற்றாவத்தை பகுதியைச் சேர்ந்த சாகித்தியன் (வயது-14) எனும் சிறுவன் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளான்.

மேலும் முல்லைத்தீவு பகுதியிலிருந்து கடந்த சில வருடங்களாக கொற்றாவத்தை பகுதியில் வசிக்கும் அஜந்தன் (வயது-21) என்பவர் கை மற்றும் கால் முறிந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளும் டிப்பர் வாகனமும் வளைவு பகுதியில் திரும்பிய போது இரண்டு வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டது. (ம-7,33,60,104)

## போட்டி...

கோணமலை அபிவிருத்தி தொடர்பான விசேட கூட்டத்தில்கலந்துகொண்ட போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவின் உதவியுடன் திருகோணமலையை வலுசக்தி, போக்குவரத்து, துறைமுகம், கப்பற்துறை, விமானம், கைத்தொழில் மற்றும் சுற்றுலா மையமாக அபிவிருத்தி செய்யும் இலக்குடன் கூடிய வேலைத் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அத்துடன், போட்டி போட்டுக் கொண்டு மத வழிபாட்டுத் தலங்கள் அமைப்பதை நிறுத்துமாறும், எதிர்காலத்தில் திருகோணமலை மாவட்டத்தில் மத வழிபாட்டுத் தலங்களை நிர்மாணிக்கும்போது, ஆளுநர், மாவட்ட அரசியல் தலைவர்கள் மற்றும் அரச அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து முடிவெடுக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். (ம-7)

## தொல்பொருளை...

திணைக்களத்துக்கு உட்பட்ட பகுதிகளில் இடம்பெறும் சேதப்படுத்தல்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர், நேற்று பாராளுமன்றில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே, அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

தொல்பொருள் பெறுமதிமிக்க இடங்களை சேதப்படுத்துவோருக்கு எதிராக, கட்டாயம்கடும்சட்டநடவடிக்கைஎடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு பகுதிகளில், பல வருடங்களாக தொல்பொருள் சின்னங்கள் பெருமளவில்அழிக்கப்படுகின்றமை அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் ஆய்வின்போது, தெரிய வந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

குருந்தூர் விகாரை தொடர்பில், இரு வேறு வழக்குகள் இடம்பெறுவதால், அது குறித்து எந்தவொரு கருத்தையும் தெரிவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அமைச்சர், விதுர விக்கிரமநாயக்க குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## முல்லையில்...

கண்டனப் போராட்டம் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இந்த அடையாளப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் ஏனைய கிளைச்சங்கங்களும் தத்தமது நீதிமன்றங்களில் குறித்த அடையாள கண்டனப் போராட்டத்தினை மேற்கொள்ளுமாறும் முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கத்தினரால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மன்னாரில்...

உயிரிழந்தவர்கள் மன்னார் நொச்சிக்குளம் பகுதியைச் சேர்ந்த யேசுதாசன் அருந்தவராஜா (வயது-43) மற்றும் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சன்னார் கிராமத்தை சேர்ந்த கணபதி காளிமுத்து (வயது-56) ஆகிய இரு குடும்பஸ்தர்கள் ஆவர்.

குறித்த இருவரும் நேற்று வியாழக்கிழமை காலை மோட்டார் சைக்கிளில் வயலுக்குச் சென்றபோது குறித்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளதோடு, குறித்த இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இதேவேளை கடந்த வருடம் மன்னார் நொச்சிக்குளம் பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட நொச்சிகுளத்தைச் சேர்ந்த ஒருவரும் குறித்த துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார்.

பழிக்கு பழி வாங்கும் நோக்குடன் இச்சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த இரட்டை கொலை தொடர்பாக அடம்பன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,285)

## விபரீத...

இளைஞர் ஒருவர் விபரீத முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

அருளானந்தம் லக்ஸன் (வயது - 22) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று மதியம் வீட்டிற்கு அருகேயுள்ள காணி ஒன்றில் உள்ள விளாத்தி மரத்தில் தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார்.

அவரது சடலமானது பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,33,104)

## தோட்ட...

தெரிய வருகையில்,

குறித்த நபர் நேற்று முன்தினம் காலை 4.30 மணிக்கு குப்பிளான் தெற்கு பகுதியில் உள்ள தோட்டம் ஒன்றில் வேலை செய்துவிட்டு பிற்பகல் 1 மணியளவில் வீட்டுக்கு வரும்போது, வீதியில் விழுந்து உயிரிழந்தார்.

அவரது சடலம் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

மாரடைப்பு காரணமாகவே அவரது மரணம் நிகழ்ந்ததாக மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டது. அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,33,104)

## நல்லைக்குமரன்...

மண்டபத்தில் ஆணையாளர் த.ஜெயசீலன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் எல்.இளங்கோவன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் இணுவில் தர்ம சாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தாணு.மகாதேவக் குருக்கள் அவர்களுக்கு யாழ் விருது வழங்கிக் கௌரவிக்கப்படும். (ம)

## மின்சார...

பதுளை நமுனுகுல பூட்டாவத்தையில் இருந்து நேற்று முன்தினம் இரவு மாதலாவத்த பகுதிக்கு சென்ற இரதம் மீண்டும் ஆலயத்திற்கு திரும்பும் வழியிலேயே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் 27 மற்றும் 37 வயது மதிக்கத்தக்கவர்களே உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் பசறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-7)


மெகா பவர் — திகதி 24/08/2023 — சீட்டிழுப்பு இலக்கம் 1564 — R 26 41 43 50 67 — 13251

தன நிதானய — திகதி -2023.08.24 — சீட்டிழுப்பு இலக்கம் - 1246 — B 15 42 51 61 B — 38121

Lucky 7 லக்கி — திகதி 24.08.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0042 — L7 இலக்கம் 2 0 — வெற்றி இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 7 1 1 3 5 1

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3458 — சீட்டிழுப்பு திகதி 24.08.2023 — E 29 55 61 74 — E 27285

HANDAHANA — சீட்டிழுப்பு திகதி 2023.08.24 — சீட்டிழுப்பு இலக்கம் 525 — மகரம் 02 11 55 58 மகரம்

மஹஜன சம்பத — திகதி 2023/08/24 — சீட்டிழுப்பு இலக்கம் 5216 — W 4 5 1 6 8 9

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2190 — வர்ணம் பச்சை — சீட்டிழுப்பு திகதி 2023.08.24 — தினம் வியாழக்கிழமை — 12 39 51 64 T — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,864,140.40 — 85872 758

சனிதா — திகதி 2023.08.24 — வெற்றி வாரம் 4351 — வர்ணம் சிவப்பு — 13 20 36 46 W — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,286,512.00 — 34229 645

ராசி — சீட்டிழுப்பு வாரம் 3902 — வர்ணம் கபிலம் — சீட்டிழுப்பு திகதி 2023.08.24 — தினம் வியாழக்கிழமை — 01 23 31 55 மீனம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,845,564/- — 45700

கப்ருக — திகதி 2023.08.24 — வெற்றி வாரம் 1366 — R 25 01 16 44 71 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 431,940,124.20 — 88136 671 — DLB தொலைபேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

சவ்பாக்ய — உத்தியோகபூர்வ முடிவுகள் — வெற்றி வாரம் 622 — திகதி 24-08-2023 — வர்ணம் நீலம் — T 13 30 47 03 — எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 10,508,680.00 — DLB தொ. பே.: 0112 333 548/47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI — வியாழக்கிழமை — வெற்றி வாரம்: 2016 — சீட்டிழுப்பு திகதி: 2023.08.24 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,855,232/- — 35 41 42 53 C — 49268 130


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள**

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**

(C-7124)


## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1989ம் ஆண்டு பரணி நட்சத்திரம் கிரகபாவம் 22 செவ்வாய் 8 இல் உள்ள நிரந்தரமாக அரச திணைக்களத்தில் தொழில் புரியும் (HNDIT) மணமகனுக்கு ஆசிரியை/அரச திணைக்களத்தில் தொழில்புரியும் மணமகளை பெற்றோர் எதிர் பார்க்கின்றனர்.

**(மணமகள் வடமராட்சிக்குள் வசிப்பவராக இருத்தல் விரும்பத்தக்கது)**

(16819)

**077 864 9878,077 634 3103** (viber)

## வெப்பநிலை...

இதன்படி, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் சில இடங்களில் இந்த கடும் வெப்பநிலை நிலவுவதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால், மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது. (ம-7)

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோவில் முன்பாக 42 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்
- நகுலேஸ்வரர் மகா வித்தியாலயத்தில் இருந்து 250 m தூரம், நகுலேஸ்வரர் ஆலயம் 50 m தூரம், பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m தூரம்.
- செம்மண்காணி நன்நீர் ஊற்றுநிலம் வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம் நல்ல சூழல்
- 3 பரப்பு ஆகவும் 2 பரப்பு ஆகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் நிலப்பரப்பு
- பார்வையிடும் நேரம் : காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(16833)

**தொடர்புகளுக்கு:- குரு**
**076 755 8606,**
**077 874 3204, 077 288 0152,**


## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**வங்கியியல் கற்கை நெறிகள்**
**Banking Courses**
**DBF & HDBF (16/09/2023)**
**(IBSL நிறுவனத்தின் மறுசீரமைக்கப்பட்ட பாடவிதானம்)**

**கணக்காளர் கற்கை நெறிகள்**
**Chartered Accounting Courses**
Business Level I,II (16/09/2023)

**தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு**
**aat (Sri Lanka)**
(AA1 - 26/08/2023) G.C.E O/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்
(AA2, AA3 -02/09/2023)

G.C.E A/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்

**Certificate Course in English**

**Further Details :** Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382/021 222 9149
077 440 5917

(C-7101)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127


## பணியாளர் தேவை

**அச்சுவேலி இண்டஸ்ரியலுக்கு**

1. லேத் மெசின் ஒப்பரேட்டர்
2. வெல்டிங் வேக்கர்ஸ்
3. ஆணி மெசின் ஒப்பரேட்டர்
4. அமோனா சீட் மெசின் ஒப்பரேட்டர்

(16832)

**077 252 3155**

## தேவை

கல்வி சம்பந்தமான (You tube chanel) இற்கு ஆங்கில பேச்சுத் திறமையுள்ள Presenter தேவை.

**ஆங்கிலத்தில் சரளமாக உரையாற்ற எழுதக்கூடியவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.**

**075 260 4360**


## உடனடி வேலைவாய்ப்பு

**V2 TRAVELS & TOURS**
**விசா விண்ணப்ப அலுவலர்**

- ஆங்கில அறிவு அவசியம்.
- Degree / Diploma அவசியம்.
- 40 வயதிற்கு உட்பட்டவர்கள்.
- இரவு வேலை செய்ய கூடியவர்கள்.
- வேறு மாவட்டங்களிலும் வேலை செய்யக் கூடியவர்கள்.

CANADA

**சம்பளம்: 50,000 (அடிப்படை)**

(C-7133)

**CIMS COLLEGE 0777-068-777**

## WORK IN UK

**WORK PERMITS**
**கட்டுமான தொழிலாளர்கள்**

➤ 5 YEARS WORK PERMIT

- கட்டட தொழிலாளர்
- நீர்க்குழாய் பொருத்துனர்
- கம்பி கட்டுபவர்
- சட்டரிங் வேலை செய்பவர்
- தச்சுத்தொழிலாளர்
- எலெக்ட்ரீசியன்

(C-7133)

போன்ற துறைகளில் வேலை செய்பவர்களுக்கு பொருத்தமான உடனடி வேலை வாய்ப்புக்கள்

CIMS COLLEGE 0777-068-777


# மரண அறிவித்தல்



## திருமதி சோதிலட்சுமி வீரசிங்கம்

| அன்னைமடியில் | | இறைவனடியில் |
|---|---|---|
| 1945.06.06 | | 2023.08.22 |

புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 4 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோதிலட்சுமி வீரசிங்கம் அவர்கள் 22.08.2023 செவ்வாய்க்கிழமை புதுக்குடியிருப்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து - மனோன்மணி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற பொன்னையா - இலட்சுமி தம்பதியினரின் மருமகளும் வீரசிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர், ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை) அவர்களின் அன்பு மனைவியும் மகேஸ்வரி, அரசரத்தினம்(U.K), புவனேஸ்வரி, காலஞ்சென்ற அருந்தவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஈஸ்வரன்(U.K), சுதாகரன்(சத்திர சிகிச்சை நிபுணர் யாழ். போதனா வைத்தியசாலை), தயாபரன்(U.K), திருமகள்(U.K), இமாவதி(ஆசிரியை, வித்தியானந்தாக் கல்லூரி முள்ளியவளை) ஆகியோரின் அன்புத் தாயாரும் மெடோனா(U.K), ராதிகா(ஆசிரியை, கொழும்பு இராமகிருஷ்ண வித்தியாலயம்), நீலவேணி(U.K), சர்வேஸ்வரன்(U.K), பத்மன்(தோல் வைத்திய நிபுணர், மாவட்ட பொது வைத்தியசாலை மாஞ்சோலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் வேஜின் லட்சுமி, ஷாரங்கன் (ஆசிரியர்), தர்மிகா, சலன், சலனி, பிரம்மிக்கா, ஜர்மிக்கா, இளங்கோவன், திரிஷாளினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை நடைபெற்று பூதவுடல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக புதுக்குடியிருப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

(C-7131)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org